# The Bible Standard

(தமிழ் வெளியீடு)



உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் .
அவைகள் என்னை நடத்தும். சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**பொருளடக்கம்**


2010 – சட்ட வாக்கியம் .............................. 2

மாபெரும் மறுதலிப்பு .................................. 4

மேசியா – தேவனுடைய தாசன் .................... 10

வானவில் வாக்குறுதி .................................. 15

அறிவிப்பு ..................................................... 16



**BS 856**

**Tamil Version - 4**

# 2010 – சட்ட வாக்கியம்

*"நீ, தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும், உன் வாலிபபிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" பிரசங். 12 : 1.*

தேவனுக்கு தங்களது இருதயங்களையும், தங்கள் வழிகளையும் அவரது வழிகாட்டுதலுக்கு விட்டிருக்கும் சிறுபிராயத்து தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் இச்செயலால் பெருக்கமான ஆசீர்வாங்களை அடைவதற்கு சாட்சிகளாயிருக்கிறார்கள். சில வாலிப பிராயத்தவர்கள், ஜீவ வழியில் முதற்படிகளை எடுத்து வைத்திருப்பதை நாங்கள் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். அத்தகைய வாலிப யாத்திரீகர்களுக்கு நாங்கள் கூறுவது என்னவென்றால் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! என்பதே. நீங்கள் சிலுவையின் இளம் போர்சேவகர்களாக புறப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் தைரிய மாகவும், உண்மையான போர்சேவகர்களாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம்; இயேசு கிறிஸ்துவாகிய அதிபதிக்கு கீழ்ப்படிவதே ஒரு போர்சேவகனின் தலையாய கடமை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். (எபி. 2 : 10). அவருடைய வார்த்தையாகிய வேதாகமத்திற்கு நெருங்கிய கவனம் செலுத்துங்கள். அவர் உன்னைக்குறித்து செய்ய விரும்புவதையும், அதின்பின் கீழ்ப்படிய மிகுந்த ஆயத்தமாகவும், ஞானத்தை அவருடைய வழிகளை எல்லாம் அறிய முடிகிறதா என்றும் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று இந்த வாலிபபிராயத்து யாத்திரீகர்களுக்கு நாங்கள் சொல்ல விரும்புகிறோம்.

சிறுபிள்ளைகள் எந்த பிராயத்தில் தங்கள் இருதயங்களை தேவனுக்கு கொடுக்கவும் அவருக்கு முற்றிலுமாக பிரதிஷ்டை பண்ண வேண்டும் என்ற கேள்வி பலரிடம் உள்ளது. அவர்கள் தங்கள் பெற்றோரால் பிறப்பதற்கு முன்னதாகவே ஏன் ஜெனிப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்படலாம், அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்ற விவரத்தை வேதாகமம் மிக அழகாக தெளிவுப்படுத்துகிறது. பெற்றோருடைய உந்துதல் அவர்களுக்கு மனதளவிலும் ஆவிக்குரிய அளவிலும் தேவபக்தியை கொடுக்க இயலும். அறிவின் வளர்ச்சி ஆரம்பத்திலேயே விசேஷமாக திடப்பட்டு, சரியான பக்தியாகவும் இந்த ஏற்பாடுகளுடன் வளர்க்கப்பட்டால் வாலிப வயதில் அவர்களது அறிவால் தேவனுக்கு முழு பிரதிஷ்டையாக பெற்றோரின் உடன்படிக்கையை நிலைப்படுத்துவார்கள். தேவனுக்கு தங்களை கொடுக்க தங்களுடைய மனம் அதின் கருத்தை உணரும்போது அவர்கள் வரவேற்கப்படவும் பிரதிஷ்டை செய்யவும் வேண்டும் (ரோம. 12 : 1). எனினும் அவர்களை பிடிவாதமாக கட்டாயப்படுத்துதல் கூடாது.

இப்படியாக, சிறு வயதிலேயே தேவனுக்கு பிரதிஷ்டை செய்த பல குறிப்பிடத்தக்க உதாரணங்கள் வேதவாக்கியங்களில் நமக்கு இருக்கின்றன. யோவான் ஸ்நானகனை குறித்து பார்க்கும் போது, அவன் பெற்றோர்கள் "இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் இருந்தார்கள்," ஜெபத்தின் மூலமாக யோவான் அவர்களுக்கு கொடுக்கப்பட்டார். – "தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டான்" (லூக். 1 : 6, 15, 44, 66, 80). பவுலும் தன் பிறப்பிலேயே அழைக்கப்பட்டிருந்தார். (கலா. 1 : 15; அப். 26 : 4, 5). அவர் யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவத்தை தழுவும் முன்பே தேவன் மீது மிகுந்த வைராக்கியம் கொண்டி ருந்தார். (அப். 22 : 3, 4). அதுபோல, தீமோத்தேயுவும் (2 தீமோ. 1 : 5; 3 : 15), சாமுவேலும் (1 சாமு. 1 : 11, 24–28; 2 : 11, 18, 19). மோசேயும் (யாத். 2 : 2) அழைக்கப் பட்டிருந்தனர்.

சிறு வயதிலே தேவனுக்கு அர்பணித்தவர்கள், பிந்திய வருடங்களில் துயரமும் துன்பமும் கொண்டுவரும் பல கண்ணிகளுக்கும் பல அசுத்தத்திற்கும் தப்பிவிடுகிறார்கள். தான்தோன்றித்தனமாய் சுற்றுவதின் மூலமாய் வரும் கசப்பான அறுவடையை அவர்கள் அறுக்க வேண்டியதில்லை. அவர்கள் இயல்பாகவே (சாதாரணமாக) தேவனோடு வாழ்வதினால் அதனை ஒரு கஷ்டமாக எண்ணுவதில்லை. ஆனாலும், அவர்கள் தங்கள் பிந்திய வருடங்களில் தங்களுடைய தொடர்ந்தேர்ச்சியான ஒழுக்கத் தினாலும் தன்னடக்கத்தினாலும் வளர்த்த பலமான குணத்தையும், தேவனோடு நீடிய தொடர்பும் அவருடைய வார்த்தைகளின் அறிவுரைகளிலும், அவருடைய கிருபையான பராமரிப்பிலும் வழிகாட்டுதலிலும் நிலைத்திருப் பதினால் எல்லா ஆசீர்வாதங்களையும் பிரதிகூலங்களையும் பெறுவார்கள்.

"தீங்கு நாட்கள் வராததற்கு முன்னே, நீ உன் வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" என்பது எத்தகைய ஞானமுள்ள ஆலோசனை ! தங்கள் வாலிப பிராயத்தில் தேவனுக்கு தங்கள் வழிகளை ஒப்புகொடுத்தவர்களுக்கும் தங்கள் பாதைகளுக்கு வழிகாட்டியாக அவரை நம்பியுள்ளவர் களுக்குக் கசப்பான ஏமாற்றங்களும் நம்பிக்கையிழப்பும் ஒருபோதும் வருவதில்லை. அவருடைய வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம் (நீதி. 3 : 17). அவை அமைதியும் எளிதான வழிகளல்ல, ஆனாலும் அவை எப்பொழுதும் சமாதானமும் இனிதானவைகளுமாய் இருக்கும். ஏனென்றால், "நான் உன்னை விட்டுவிலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று சொல்லியிருக்கிறாரே (எபி. 13 : 5; சங். 118 : 6, 7). அவர் தன்னுடைய காரியத்திற்காக தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய, தேவனை நேசிக்கிற வர்களை அவர் பாதுகாத்து, ஆசீர்வதித்து, எல்லா காரியங்களையும் நன்மைக்கேதுவாக செய்ய எப்பொழுதும் கூட இருக்கிறார். (ரோம. 8 : 28).

## அறிவுரையாலும் உதாரணத்தினாலும் போதித்தல்
### TEACHING BY PRECEPT AND EXAMPLE

குழந்தைகளையும் வாலிப பிள்ளைகளையும் தங்கள் பொறுப்பில் வைத்திருக்கும் பிரதிஷ்டையாளர்கள், அவர்களை சீர்படுத்த தங்கள் சொந்த பிரதிஷ்டை வாழ்வின்

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

காரியங்களாலும், சத்தியத்தோடுள்ள தங்களுடைய நெருங்கிய தொடர்பையும் அறிவுரையாக அவர்களுக்கு அறிவித்து, தங்கள் முதிர்ந்த அனுபவத்தையும் தீர்மானத்தையும் கொடுத்து கிறிஸ்துவிடத்தில் அவர்களை நடத்த வேண்டும். இத்தகைய முயற்சிகள் சரியாக செய்யப்பட்டால் வாலிப பிராயத்தினர் மீது அது கிரியை செய்யாமல் இருக்க மாட்டாது.

அவர்கள் உங்கள் மாதிரியிலும் போதனையிலும் பிரதிஷ்டை செய்த விசுவாசிகளுக்கும் உலகத்தாருக்குமுள்ள வித்தியாசத்தை தெளிவாக கண்டு கொள்வார்களாக. உலகத்தோடு எந்தவொரு சமரசமும் இருக்க வேண்டாம் என்பதையும் கண்டு கொள்வார்களாக. கிறிஸ்துவை பின்பற்றுவது என்பது உலகத்தையும், அதின் எல்லா நோக்கங்களையும் அதின் சந்தோஷங்களையும், அதின் இன்பங்களையும் இணக்கத்தையும் விட்டுவிடுதல் என்பதே என்பதையும் கண்டு கொள்வார்களாக. அவர்கள் உண்மையில்லாத உலக இன்பங்களை கண்டு கொள்ளவும், மாயைக்குள் சிக்கியிருப்போரின் அதிருப்தியையும் இளைப் பாறுதல் இல்லாத நிலைமையையும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக உலகத்தை விட்டு விட்டோரின் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கவனிக்க நமது கவனத்தைத் திருப்ப வேண்டும். அது தேவன் எங்களை எவ்வளவாய் கிருபையாய் நடத்தினார் என்று பிறருக்கு சொல்ல உதவியாகவும், நல்ல மேய்ப்பனின் அன்பான கோல் எங்களை தவறான பாதையில் போகவிடாமல் எங்கள் வழிகளில், ஏற்பட்ட பல்வேறு திருப்பு முனைகள் பற்றியும், நாங்கள் பாதை தவறினபோது, அவருடைய இரக்கத்தால் எங்களை தொடர்ந்து நடத்தி, மறுபடியும் எங்களை அவருடைய மந்தையோடே சேர்த்துக் கொண்டார் என்பதையும், அவர் எங்களை தீமையிலிருந்து பாதுகாத்து, துயரத்தில் ஆறுதலளித்து, எங்கள் ஏங்கிய ஆத்துமாக்களுக்கு அவருடைய இரட்சண்யத்தின் சந்தோஷத்தை அளித்தார் என்று மற்றவர்களுக்கு சொல்வதற்கு உதவியாயிருக்கும்.

நிறைவதற்கு முன்னான நிலையே இந்த உலகத்தின் அற்பமானவைகளால் மனமானது முன்பே ஞானவான்களாலும், அன்பான இருதயங்களாலும் வழிநடத்த எளிதாகும். ஒருவரும் இந்த விலையேறப்பெற்ற தருணங்களை இழக்கக்கூடாது. அது பின்வரும் வருடங்களில் நன்மையான அறுவடையை எஜமானரின் பாராட்டுதலால் கொண்டுவரும். தேவன் நமக்கு கொடுத்திருக்கும் பெரிய வேலையை விட்டு திரும்பாமல் இருப்பதே நமது குறிக்கோளாகும். அதாவது, அவருடைய வார்த்தையை முதிர்ந்தவர்களுக்கு போதிப்பதும், அதற்கடுத்தபடியாக வளரும் சந்ததியினருக்கு போதிப்பதுமாகும்.


இவைகளைப் பின்பற்றாத மற்றவர்களுக்கு தங்கள் சிலாக்கியத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். பல பிரதிஷ்டை செய்த பெற்றோர்களுக்கு ஒவ்வொரு நாளும் இத்தகைய சிலாக்கியங்கள் உண்டு. அநேகர் வாலிபபிராயத்தவர்களோடு தொடர்பு கொண்டாலும் தவறான காரியத்தால் அதனை புரிந்து கொள்ள முடியாமல் தங்கள் வெளிச்சத்தை அவர்கள் மேல் பிரகாசிபிக்க மறந்து விடுகிறார்கள்.

இளம்பிராயத்தினர் பெருமை, குறிக்கோள்கள், அற்பமான காரியங்கள் மற்றும் அறிவீனமான செயல்கள் முதலிய ஓட்டங்களை முதலில் ஓடி பின்னர் தேவனிடம் மனந்திரும்ப வேண்டும் என்று எண்ணுவது மிக பெரிய தவறாகும். இக்காரியங்களுக்கு எதிராக முடிந்த அளவிற்கு தங்களை பாதுகாப்பதே அவர்கள் கடமையாகும். உலகம் அதில் அவர்களை சிக்கவைக்கும் முன்னரே அவர்களுடைய நம்பிக்கைகளையும் ஐக்கியத்தையும் தேவனிடம் மையம் கொள்ள உதவ வேண்டும்.

இயேசுவை நேசிக்கிற சில இளம்பிராயத்து சகோதரர்கள், தேவனை அறியாத சக நண்பர்கள் மத்தியில் அவருக்காக நிற்பதில் வெட்கப்படுவதில்லை என்று நாங்கள் அறிவோம். ராஜ்யத்தின் நன்மையான செய்தியை தங்கள் சக மாணவர்களிடம் சொல்லும் போது ஏளனப்படுத்தப்பட்டாலும் அல்லது விசேஷமாக எண்ணப்பட்டாலும், அவர்கள் தைரியமாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். உலகத்தையும் அதின் விருப்பங்களையும் இன்பங்களையும் தைரியமாக உதறித்தள்ளி விட்டு தேவனுக்கு தங்கள் வாழ்க்கையை பிரதிஷ்டை பண்ணியிருக்கிற சில இளம் பிராயத்தவர்களைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த நல்ல வேலை இன்னும் அதிகமாகவும் ஆழமாகவும் விரிவடையட்டும். இளம் பிராயத்தவர்கள் தேவனுடைய ஊழியத்தில் உபயோகப்படுதலையும், நீடிய எதிர் நோக்குதலிலும் களிகூரட்டும். முதிர்ந்த வயதில் இருப்போர் பாரம் மற்றும் நாளின் வெப்பம் ஆகியவற்றின் கீழ் தேவனுடைய படையில் அனுபவமிகுந்தவர்களாய் ஊழியம் செய்கிறவர்கள் வைராக்கியமாகவும், ஞானமாகவும் இருங்கள். வயோதிக யாத்திரிகர்கள் தெய்வீக சத்தியத்தின் மீது சாய்ந்திருந்து அதின் உறுதியில் களிகூறுகிறார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு வெளிச் சத்தை கொடுக்கும் வழிகாட்டிகளாக, தங்கள் வாழ்க்கையின் முடிவில் "நல்ல போராட்டத்தை போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தை காத்துக் கொண்டேன்" என்று தங்களை சாட்சியப்படுத்த இயலும்.

* * *



# மாபெரும் மறுதலிப்பு

## THE GREAT APOSTASY

***"அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும், பொய்யான அற்புதங்களோடும் ....... இரட்சிக்கப்படத்தக்கதாய் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்." 2 தெச. 2 : 9-12 NKJ***

வேதாகமத்தை ஆராய்ச்சி செய்ய உதவுபவைகள் நம்முடைய நாட்களில் மிக அதிகமாகவும் அணுகத் தகுந்ததாகவும் இருக்கிறது. மூல வேதாகமத்தின் வசனங்கள் நரகம் என்று மொழிப்பெயர்க்கப்பட்டதையும் இந்த உதவிகளின் மூலமாக தெளிவாக காட்டப்பட்டுள்ளது. பிற்காலத்தில் வாதிக்கப்படுதல் என்ற கொள்கையாலான இந்த தவறான எண்ணத்திற்கு தேவனை பொறுப்பாளியாக ஆக்க முடியாது; ஏனெனில் அவர் பாவத்திற்கும், இருளுக்கும் வேறு எந்த வகையான தப்பறைக்கும் மூலகாரணராகயிருப்பதில்லை. அவருடைய எல்லா கிரியைகளும் உத்தமமானது; அவர் "நீதியுள்ளவர்", அன்பு என்பது அவர் நாமம். அப்படியிருப்பதினால், அவர் எந்த மனுஷரையும் வாதிப்பதற்காக உண்டுப்பண்ணவில்லை. இந்த தப்பறையான போதனைக்கு மனுக்குலமே முழு பொறுப் பாளியாகவும் முடியாது. ஏனென்றால் இந்த தவறான கொள்கையால் சில மனுஷர்கள் மாத்திரம் மனப்பூர்வமாய் உடன்பட்டாலும், பலர் அறியாமையினால் இருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல், ரோமர் முதலாம் அதிகாரத்தில் மனுஷர்கள் தேவனை அறிந்தபோதும், அவரை தேவனாக தொழுதுகொள்ளாமலும், தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், மனப்பூர்வமாய் அவரை விட்டு விலகினார்கள். (ரோம. 1 : 18-28) என்று கூறுகிறார். மேலும், பரிசுத்த ஸ்தானத்திலிருந்து விழுந்தவனும், மனுக்குலத்தின் மனதைக் குருடாக்கினவனும், துன்மார்க்க எண்ணத்தினால் தேவனுடைய எதிராளியாக ஆனவனு மாகிய சாத்தானைக் குறித்தும் கூறுகிறார். (2 கொரி. 4 : 4; யோவா. 12 : 31; 14 : 30). அந்த மகா மோசம் போக்குகிறவனை குறித்து நமது ஆண்டவர், "அவன் ஆதிமுதற்கொண்டு [மனித சிருஷ்டிப்பு முதற் கொண்டு] மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாய் இருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் என்று கூறுகிறார்." (யோவா. 8 : 44).

கூடுதலாக, நமது எஜமானர், வெளிப்படுத்தின விசேஷத்தில் சுவிசேஷ யுகம் முடிவடைந்து அடுத்த யுகம் ஆரம்பிக்கும், அக்காலத்தில், உலக ஜனங்களை அவன் மோசம்போக்காதபடிக்கு ஆயிர வருஷமளவும் சாத்தான் கட்டப்படுவான் என்று நமக்கு கூறியுள்ளார். சாத்தான் தனது பொய்யை ஆதியிலே தொடங்கினான். தனது முதல் மகாபெரிய பொய்யை தாயாகிய ஏவாளிடம் ஏதேனில் (ஆதி. 3 : 4, 5; 2 கொரி. 11 : 3) கூறினான். அவன் அதுமுதல் தாயாகிய ஏவாளிடம் "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சொன்ன பொய்யை அதுமுதல் உறுதியாக பரப்பினான் - தேவன் உங்களை மோசம் போக்கிவிட்டார்; ஒருவரும் மரிப்பதில்லை; மரணம் என்பது அழிவுள்ள சரீரத்தை ஒரு ஆடையைப் போல கழற்றிபோட்டு மற்றொரு விதமான வாழ்வுக்குள் சில மாற்றங்களுடன் செல்வதாகும் என்று சொன்னான். ஆனால் வேதாகமம் நமக்கு, மரணம் என்பது உண்மையானது. மரணம் என்பது மரணமே, ஜீவனோடு இருப்பது அல்ல என்று உறுதியாய் கூறுகிறது.

### பாவத்தின் வளர்ச்சி

#### SIN'S DEVELOPMENT

சாத்தானுடைய வார்த்தைகளுக்கும் தேவனுடைய கூற்றுக்கும் ஒவ்வும்படி செய்ய முடியாத முரண்பாடு இருக்கிறது. ஆனால் தேவன் மனுஷனை அவன் போக்கிலே விட அனுமதித்தார், இதனை ஏற்கெனவே ரோமரில் பரி. பவுலால் காட்டப்பட்டிருக்கிறது. மனுக்குலம் அவரை பற்றிய அறிவில் நிலைத்திருக்க விரும்பவில்லை, அதனால் சில காலங்கள் அவர்கள் தீமையை அனுபவிக்க இடம் கொடுத்தார். (ரோம. 1: 28-32). ஆனாலும் அவர் உலகத்திற்கு தங்கள் சொந்த சித்தத்தின்படி செல்ல அனுமதித்தார், ஆயினும் அவர் அவர்களை கைவிட வில்லை. ஆதி முதற்கொண்டு தேவன் குறித்த காலத்தை நியமித்திருக்கிறார். ஜனங்கள் தக்க பாடத்தை கற்றப் பின்னர் "விருப்பமுள்ள" யாவரும் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுதலையாக்கப்படுவார்கள். அவர் அவைகளை இடங்கொடுத்த காலமுதல் அவர்கள் தங்கள் மனசாட்சியின் சத்தத்தைக் கேட்கவோ - (குறிப்பிட்ட அளவில் அது இன்னும் மனிதரில் இருக்கிறது) அல்லது அவருடைய வார்த்தைகளின் புத்திமதிகளை அறிந்து கொண்டது முதல் அவற்றை கவனிக்கவோ அல்லது சாத்தானுடைய வார்த்தைகள் மற்றும் தீமையான சிந்தனைகளையும் தேர்ந்தெடுக்கவோ அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. பெரும்பான்மையானவர்கள் சாத்தானை, தேவனுடைய விரோதியை பின்பற்றி போனார்கள்.


எதிராளியானவன் தேவனையும் அவருடைய நீதியையும் எதிர்த்து அவனுடைய தப்பிதங்களையும்

வஞ்சகத்தையும் பரப்பினான். ஏதேனில் நம்முடைய ஆதி பெற்றோர் சிருஷ்டிக்கப்பட்டது முதல் 1656 வருடங்களாக வெற்றி பெற்றான். தேவ தூதர்களில் பலர் மனுக்குலத்தை துர்நடத்தையால் சீரழிப்பதற்காக சாத்தானுடன் சேர்ந்து பாவத்தில் விழுந்தனர். (ஆதி. 6 : 1-5). முடிவில் உலகம் முழுவதும் சீர்கெட்டதால் தேவன் மனுக்குலத்தை பூமியிலிருந்து அழித்து போட்டார். அவர்களோடு விழுந்து போன தேவ தூதர்களின் முறைகேடான சந்ததியையும் அழித்துப்போட்டார். நோவா மற்றும் அவன் குடும்பத்தார் மூலம் மனுக்குலத்தின் புதிய துவக்கத்தைத் தொடங்கினார். அவன் “தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே உத்தமனும் நீதிமானுமாய் இருந்தான்.” (அதி. 6 : 1-22).

## சாத்தானின் தீமையான வேலைகள்

### SATAN'S EVIL WORK

உடனே பின்னர், சாத்தான் தனது தீமையான வேலைகளை சில நூற்றாண்டுகளில் ஆபிரகாமின் நாட்களில் ஆரம்பித்தான். மறுபடியும் மனுக்குலம் முழுவதும் விக்கிரக வணக்கத்தினாலும் பாவத்தினாலும் கெடுக்கப் பட்டார்கள். அசுத்த ஆவிகளை அதாவது, விழுந்து போன தூதர்களை ஜலப்பிரளயத்திற்குப் பிறகு தேவன் தடைப்பண்ணினார். சடத்துவ சரீரத்தை எடுக்க வல்லமையில்லாததால், தங்கள் ஏமாற்று வேலையை, மனிதர்களை ஊடங்களாக கொண்டு அவர்களுடைய மனம் மற்றும் சரீரங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு தங்க ளுடையது போல் அவைகளை உபயோகப் படுத்தி தங்களுடைய வஞ்சகங்களை தொடர்ந்து செய்தனர். இவையாவும் தன்னைத்தானே அதிபதியாக்கி கொண்ட சாத்தானும் விழுந்துபோன தூதர்களாலும் செய்யப்பட்டதாகும். (எபே. 2 : 2; 6 12). மரித்துபோகிற ஜனங்கள் மரிக்க வில்லையென்றும் - அவர்கள் ஒன்றுமில்லாதவர்களாய் போகவில்லையென்றும் - முன்னதை விட நன்றாக ஜீவிக்கிறார்கள் என்றும் மனுஷரை நம்பவைக்க விரும்புகின்றனர். தற்காலத்தில் தொலைக்காட்சிகளில் “தி கோஸ்ட் விஸ்பர்ரர்; தி மீடியம், கோல்டு கேஸ்” ஆகிய நிகழ்ச்சிகள் மரித்தோர் ஜீவிக்கிறார்கள் என்று கூறிவருகிறது. (பிர. 9 : 5, 10).


“பிசாசுகள் துரத்தப்பட்டன” மாற். 1 : 32-34

சத்தியத்தையும் இந்த விஷயத்தில் உண்மையான காரியங்களையும் பார்க்க முடியாதபடிக்கு இந்த மகா பெரிய தப்பறைகள் மனுக்குலத்தை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கி யுள்ளது. எவ்வித சூழ்நிலைகள் சூழ்ந்தாலும் தேவன் பூரணரானபடியால், அவர் சாத்தானையும் அவன் லேகியோன்களையும் கீழ்ப்படியாத சந்ததியின் மேல் அதிகாரம் செலுத்த அனுமதித்தார். அதின் மூலமாக ஒரு நல்ல பாடத்தை மனுஷருக்கும் தேவ தூதர்களுக்கும் கற்றுகொடுக்கலானார்.

கி.மு. 2472-ல் ஜலப்பிரளயத்திற்கு பின் 427 ஆண்டுகள் கழித்து தேவன் ஆபிரகாமை அழைத்து அவனது விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் சோதித்த பின்னர் விசுவாசத்தின் வெகுமதியாக அவனோடு உடன் படிக்கைப் பண்ணி பூமியிலுள்ள வம்சங்களை எல்லாம் உன் வித்தினால் ஆசீர்வதிப்பேன் என்றார். குறித்த காலத்தில், ஆபிரகாமின் பேரனாகிய யாக்கோபின் சந்ததியாரை தேவனுடைய விசேஷ ஜனங்களென்று நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் அவர்களை தெரிந்தெடுத்தார். மனுக்குலத்திற்குரிய தேவனுடைய பெரிய இரட்சிப்பின் திட்டத்தை குறித்து முன்னடையாளமாக காட்டப்படுவதற்கு இந்த ஜனங்கள் உபயோகிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் பூமியின் பிற தேசத்தவர் களிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களாக இருந்தனர்.

தேவன் இஸ்ரவேல் ஜாதியாரோடு விசேஷ உடன்படிக்கைகளை செய்தபோதிலும், அவர்கள் அவருடைய நியாயப்பிரமாணத்திற்கு முழுமையாக கீழ்ப்படிய வாக்குறுதியளித்தபோதிலும் அவர்கள் தேவனுடைய நீதியான பிரமாணத்தில் நிலைத்திருக்க தவறிப்போனார்கள். அவர்கள் பிற தேசத்தவர்கள் போல, விக்கிரக ஆராதனைக்காரராகவும், சூனியக் காரர்களையும் மந்திரவாதிகளையும் நாடியும் மரித்தவர்களோடு பேசியும், விழுந்துபோன ஆவிகளின் ஊடகங்களையும் நாடினர். இதனால் தேவன், விழுந்துபோன தூதர் களின் ஊடகங்களாக இருப்பவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று எச்சரிக்க வேண்டியதாயிற்று. அவர்கள் தேவனுடைய ஜனங்களாக இருப்பதாக ஒப்பு கொண்டனர். அசுத்த ஆவிகளிடமிருந்து தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டுமென்றும் அவர் அவர்களை எச்சரித்தார்.

நம்முடைய ஆண்டவரின் நாட்களில், இந்த விழுந்துபோன ஆவிகள் இஸ்ரவேலில் குறிப்பிட்ட அளவு நுழைந்திருந்தன. அவருடைய பல அற்புதங்களில் குணமாக்குதலும் ஒன்றிற்கும் மேற்பட்ட இந்த துன்மார்க்க பிசாசுகள் பிடித்த பைத்தியகாரர்களையும் பிசாசினால் பிடிக்கப்பட்டவர்களையும் விடுவித்தார். தப்பறையான போதனைகளுக்கும் பாகால் வழிபாட்டிற்கும் இஸ்ரவேலர் குறிப்பாக ஆட்சி செய்யும் வகுப்பார் கணிசமாக பாதிக்கப் பட்டிருந்தார்கள் என்பது உண்மையே. சதுசேயர்கள் தேவ நம்பிக்கையற்றவர்களும், மரித்தோர் உயிர்த்தெழுதலை முற்றிலும் மறுதலிக்கிறவர் களாகவும், தூதர்களையும் ஆவி ஜீவிகளையும் நம்பாதவர்களாகவும் இருந்தனர். மனவியாதிகளும் மனகுழப் பங்களும் சரீர வியாதிகளை விடவும் அதிகமாக பரவியிருந்தது. நம்முடைய ஆண்ட வரின் நாட்களில் கிரேக்க தத்துவங்களான ஆத்துமா அழிவதில்லை என்ற கோட்பாடு மேன்மை யடைந்திருந்தது. அதின் விளைவாக, “நீங்கள் சாகவே சாவதில்லை” என்ற சாத்தானின் மகா பெரிய பொய் செழித்து காணப்பட்டது. புறஜாதி தேசங்களைப் போல, கிரேக்க நாட்டிற்கும் பல தெய்வங்கள் இருந்தன. கிரேக்கர்கள் பிசாசுகளையும், விழுந்துபோன தூதர்களையும் வழிபடுபவர்களாக இருந்தனர். (உபா. 32 : 16, 17; சங். 106 : 34-38; 1 கொரி. 10 : 19, 20)

## அழைப்பு புறஜாதிகளுக்கு செல்கிறது
### CALL GOES TO GENTILES

உலக அளவில் கிரேக்க மொழிக்கும், "ஞானமென்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற" கிரேக்க தத்துவத்திற்கும், நன்மதிப்பு இருந்ததால், ஜனங்கள் எல்லாருடைய மனதின் யோசனைகளிலும் அவைகள் ஆக்கிரமித்து விட்டன. (1 தீமோ. 6 : 20). பாலஸ்தீனத்திலும் இதன் தாக்கம் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது என்பது உண்மையே. தேவன் இஸ்ரவேலுக்கு மட்டுமே அவரது நியாயபிரமாணத்தையும் அவருடைய தீர்க்கதரிசனத்தையும் கொடுத்தார். அவர் அவர்களிடம், "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்" என்று கூறினார் (ஆமோ. 3 : 2). இயேசு கிறிஸ்து வரும்போது, அவர் அவர்களிடம், "நீங்கள் யோவானுடைய சாட்சியை ஏற்றுக்கொண்டிருந்தீர்களானால் என் சீஷர்களாக ஆக ஆயத்தமாகியிருப்பீர்கள்" என்றார். அநேக யூதர்கள் தேவ பக்தியுள்ளவர்களாக இருந்தனர். தேவன் அவர்களை நியாயப்பிரமாணத்தினால் விடுவிப்பார் என்று எண்ணினார்கள். மாறாக, இயேசு அவர்களிடம், ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார் என்று சொன்னார். தேவன் தகுதியான ஆபிரகாமின் சந்ததியை ஏற்படுத்துவார் என்று உறுதியாக கூறினார்.



"கோதுமைக்குள் களைகள்"
மத். 13 : 24-30

இயேசுவினுடைய ஊழியத்தில் இந்த புதிய சந்ததியை ஆரம்பிப்பதே அவருடைய வேலையாக இருந்தது. இயேசு, அவரே இந்த சந்ததிக்கு தலையா யிருக்கிறார். சுவிசேஷ யுகம் முழுவதும் நடைபெற்ற முக்கியமான வேலை என்னவென்றால் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியை அழைத்து, ஆயத்தப்படுத்தி சபையாக ஆக்குவதே ஆகும். இந்த வாக்குத்தத்தம் முதலாவது யூதர்களுக்கு கொடுக்கப்பட்டது, ஆனால் அவர்கள் தேசமாக இதற்கு பாத்திரவான்களாக இல்லாததால், தேவன், "மீதியான" விசுவாசமுள்ளவர்களை (ரோம. 11 : 5) அந்த ஜனங்களிலிருந்து தெரிந்தெடுத்தப் பின்னர் அந்த அழைப்பு புறஜாதிகளுக்குப் போனது. அங்கே அபிஷேகம் செய்யப்பட்ட 1,44,000 என்ற போதுமான எண்ணிக்கையை நிறைவுபடுத்த அவர்கள் இந்த சந்ததியாக சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவர்களே கிறிஸ்துவின் சபையும், அவருடைய சரீர அங்கத்தினருமாவார்கள். (வெளி. 14 : 1). இந்த வேலை செய்து முடிக்கப்பட்ட பின்பு, கிறிஸ்து பூமியில் இரண்டாம் தரம் வந்திருக்கும் போது மறுபடியும் ஆபிரகாமின் மாம்சமான சந்ததியையும் சந்திப்பார். பரலோக ராஜ்யத்திற்காக அல்ல ஆனால் பூமிக்குரிய ராஜ்யமாக்கப் படுவதற்கே அவர்கள் ஒளியூட்டப்பட்டு ஆசீர்வதிக்கப் படுவார்கள். ஆனால் இந்த ஆசீர்வாதம் விசுவாசமுள்ள சந்ததியாகிய ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி மூலம் அவர்களுக்கு வந்து சேரும்.

நம்முடைய ஆண்டவர், கோதுமை மற்றும் களைகள் பற்றிய உவமையில் ஆவிக்குரிய சந்ததி "மீதியான" விசுவாசமுள்ளவர்களாக இருந்தப்படியாலும் பாத்திரவான்களாக எண்ணப்பட்டபடியாலும் கிறிஸ்துவுடனே கூட அரசாட்சியில் உயர்த்தப்படுவார்கள் என்று காட்டுகிறார். மீதமிருக்கும் அநேகர் மாம்ச சந்ததியார், அந்த விசேஷித்த தயவை இழந்தவர்கள். "இயேசு கிறிஸ்துவுக்குள் பயபக்தியாய் நடக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்," என்ற அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகள் உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளன.

## சாத்தான் களைகளை விதைத்தான்
### SATAN SOWED TARES

இந்த உவமையில் இயேசு, அப்போஸ்தலர்கள் மரணத்தில் நித்திரையடைந்த பின்னர், சபையாகிய தேவனுடைய கோதுமை நிலத்தில் பெரிய எதிராளியாகிய சாத்தான் வந்து "களை" வித்தை விதைத்து சென்றதை காண்பிக்கிறார். இந்த களை வித்து வளர்ந்து (கிறிஸ்தவர்களை நம்ப செய்ய) "கோதுமையை" போல் காட்சியளிக்கிற "களையை" உண்டாக்கியது. இவர்கள் உண்மையான சபையுடன் இணைந்து கொண்டு தங்களை நிஜ "கோதுமை" என்று சொல்லி கொள்கிறார்கள். உவமையில், வேலைக்காரர்கள் எஜமானிடம் வந்து, கோதுமைகளிடையே உள்ள களைகளை பிடுங்கி போட உமக்கு சித்தமா என்று கேட்கின்றனர். ஆனால் எஜமான், நீங்கள் அப்படி செய்ய வேண்டாமென்றும் களைகளைப் பிடுங்கும் போது கோதுமையும் பிடுங்கப்பட்டுவிடும் என்றார். அவைகள் இரண்டையும் "அறுப்புமட்டும்" வளர விடுங்கள் என்று அவர்களுக்கு உத்தரவிட்டார். அவர் மறுபடியும் பிரசன்னமாகி அறுக்கிறவர்களை நோக்கி, "முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்கு கட்டுகளாக கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்" என்பார். மத். 13 : 27-30. அந்த நிலம் கோதுமை நிலமாக இருந்தது; அங்கே இருப்பதற்கு களைகளுக்கு எந்தவொரு உரிமையும் கிடையாது.

இது சுவிசேஷ யுக முடிவில் வரவிருந்த பிரித்தெடுக்கும் வேலையை பற்றி நமது ஆண்டவரால் "அறுவடையின்" காலம் என்று அழைக்கப்பட்டது. உவமையில், "நிலம்" இயேசு சொன்னது போல் உலகத்தை, திரளான மனுக்குலத்தை குறிக்கிறது.

கோதுமை நிலத்தில் சாத்தானால் விதைக்கப்பட்ட தீய வித்து புறஜாதியாரின் தத்துவங்களை குறிக்கிறது. இதற்கு முந்தைய காலகட்டத்தில் நீரோ (Nero), டயக்லிஷியன் (Diocletian) மற்றும் ரோம பேரரசர்களால் வளர்ந்து கொண்டிருந்த சபை துன்புறுத்தப்பட்டது. சத்தியத்தை உறுதியாக பிடித்த விசுவாசமுள்ள சீஷர்கள் அங்கு இருந்தார்கள். கிறிஸ்துவிற்கு உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள். மிகுந்த கஷ்டங்களை தாங்கி கொண்டார்கள். அவர்களில் பலர் வன்முறையால் மரணத்திற்குள்ளாக்கப்பட்டார்கள்.

பின்னர், துன்புறுத்துதலிருந்து விடுதலையும் செழிப்பும் ஏற்பட்டது. இது அநேகர் விழுந்து போனதை நிரூபிக்கிறது. சபையானது தனக்கு நேராக கிரேக்க தத்துவ ஞானிகளின் கவனத்தை ஈர்த்தது. அவர்கள், "கிறிஸ்தவர்களாகிய நீங்கள் நல்லதை போதிக்கிறீர்கள். உங்கள் போதகரான இயேசு, ஒரு மாமனிதர், ஒரு சிறந்த தத்துவஞானி. ஆனாலும் எங்களிடம் சிறந்த தத்துவஞானிகளும் போதிப் பாளர்களும் இருக்கின்றனர். நாங்கள் உங்களோடு இசைந்திருக்க விரும்பு கிறோம். ஆனால் அதை செய்வதற்கு நாம் குறுகிய எண்ண முடையவர் களாயிராமல், அனைவரும் பரந்த நோக்குடன் இருக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் பிறருடைய பெரிய சத்தியங்களை காணக்கூடியவர்களாக இருக்க வேண்டும். சாக்ரட்டீஸ் (கி.மு. 469- கி.மு. 399) மற்றும் பிளாட்டோ (கி.மு. 427- கி.மு. 347) மற்றும் நமது சிறந்த போதகர்கள் நமக்கு எதிர்கால வாழ்க்கை சம்பந்தமான போதனைகளை இயேசு பிறப்பதற்கு முன்னமே கற்றுத் தந்திருக்கிறார்கள்" என்றனர்.



"பொற்பாத்திரத்தை தன் கையிலே பிடித்திருந்தாள்"
வெளி. 17 : 4

அதனால் புறஜாதிகள் அனைவரும் இந்த மதத்தில் ஒன்றாக இணைந்தால் நலமாக இருக்குமென்று கிறிஸ்த வர்கள் எண்ணினார்கள். இவ்விதமாக பெரும் பாலானவர்கள் புறஜாதி தத்துவஞானிகளோடு படிப்படியாக இணங்கி அவர்களோடு தோழமை வைத்து கொண்டார்கள். பிற தெய்வ ஆதரவாளர்கள் பலரும் கிறிஸ்தவத்தில் நம்பிக்கை வைத்தார்கள். பின்னர், வட ஐரோப்ப பழங்குடியினரில் பலர் இந்த புறஜாதி தத்துவங்களையும் கோட்பாடுகளையும் கிறிஸ்தவத்தோடு இணைத்தார்கள்.

## போப்பு மார்க்கத்தின் எழுச்சி

### RISE OF THE PAPACY

விஷமுள்ள திரவத்தை தயார் செய்து சத்தியத்தின் "பொற் பாத்திரத்தில்" ஊற்றுகின்ற காலம் வந்தது. தேவனுடைய சபையென்று உரிமைக் கொண்டாடும் apostate "ஸ்திரி" அதை உலகிற்கு கொடுத்தது. அவள் தேவனுடைய பெயரளவில் மாத்திரம் இருக்கும் சபையானவள். "அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்கள்." (எரே. 51 : 6-13; வெளி. 17 : 1-5, 15) தப்பறை பரவியது. தேவ பக்தியும் தாழ்மையின் ஆவியும் படிப்படியாக ஆதிக்கத்தின் ஆவியால் மேற்கொள்ளப்பட்டன. சபை, பாடுகளை தவிர்க்க விரும்பியும், மனுஷரில் மரியாதையை விரும்பியது. இந்த வளர்ச்சிகள் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கியதால் அவள் தன்னை பேராயர்களை கொண்ட ஸ்தாபனமாக்கிக் கொண்டாள். ரோம பேராயரே போப்பு என்று அறிவிக்கப்பட்டது. சபைக்கும் உலகத்திற்கும் அவரே நமது ஆண்டவ ராகிய இயேசுவை பிரதிநிதித்துவப் படுத்துகிறார் என்று உரிமை கோரி னார்கள். போப்பு மகிமையின் சிங்காச னத்தில் உட்கார்ந்து ராஜாக்களை ஆணையிட்டும், ஆவிக்குரிய மற்றும் தற்காலிகமான அதிபதிகளையும் ஆண்டு, வல்லமையிலும் அதிகா ரத்திலும் வல்லவனானான். ஆத்துமா அழியாதென்றும், மரணத்திற்கு பின் துன்மார்கர் சித்திரவதை செய்யப் படுவார்கள் என்ற புறமத போதனை நித்திய வேதனையின் அடிப்படை போதனையாக்கப்பட்டது. இதனால் புறமதத்தினர் மரணதிற்குப் பின் என்றென்றைக்கும் வாதிக்கப் படுவார்கள் என்ற கருத்து உருவானது. உத்தரிப்பு ஸ்தலமோ நல்ல கத்தோலிக் கர்களுக்காக தனித்து ஒதுக்கி வைக்கப் பட்டது.

இந்த கருத்துகளையும் கோட் பாடுகளையும் டான்டே (Dante) என்பவர், டிவைன் காமெடி (The Divine Comedy) என்ற தன்னுடைய மகா காவியத்தில் எழுதியிருந்தார். நம்பிக்கை கைவிடப்பட்ட நிலைக்குள் பிரவேசிக்கிற எல்லாரும் என்று நரக வாசலின் மேல் எழுதப்பட்டிருந்தது என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இது அவர்கள் சதா காலமும் வாதிக்கப்படுவதற்காக ஏற்படுத்தப்பட்ட இடமாகும். இதில் புறமதஸ்தர்கள் எல்லாரும் போவார்கள்; நல்ல கத்தோலிக் கர்கள் அதில் பிரவேசித்ததில்லை. வேத வாக்கியங்களில் சொல்லப்படாத உத்தரிப்பு ஸ்தலம் என்ற மற்றொரு இடத்தில் பல்வேறு பாவங்களுக்கு விதவிதமான தண்டனைகள் கொடுக்கப்படுகிறது. இதன் விளைவாக சபையில் "களைகள்" பெருகிற்று. ஜனங்கள் ஆலயங்களுக்கு போகாமலும், அவர்களுடைய ஸ்தாபனங்களுக்கு ஆதர வளிக்காமல் இருந்தால் அவர்கள் நித்திய வேதனைக்கு செல்வார்கள் என்று பயமுறுத்தப்பட்டனர். அவர்களுடைய மரித்த குழந்தைகளுக்கு இரட்சிப்பு மறுக்கப்பட்டன.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் ஆயிர வருட கால அரசாட்சியாகிய ஆயிர வருஷ யுகம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை தொடர்ந்து

கி.பி. 799-யில் போப் லியோ III யின் கீழ் ஆரம்பமானது என்று போப்புமார்க்கம் கோரியது. அவன் தன்னை கிறிஸ்துவின் பிரதிநிதியாக - அவருடைய பதிலாளாக கூறிகொண்டு, கிறிஸ்துவின் அரசாட்சியை அவனுடைய இடத்தில் ஆரம்பித்தான். அந்த வருடத்தின் "போப்பின் மாநிலங்களை" அதிபர் சார்லிமான் (Charlemagne) ஆல் சபைக்கு விட்டுகொடுக்கப்பட்டது. 1799-ஆம் ஆண்டில் அவர்களுடைய "ஆயிர வருஷ யுகம்" முடிவடைந்தது என்று கோரியது. அந்த ஆண்டில் சபைக்கு கொடுக்கப்பட்ட மாநிலங்கள் நெப்போலியனால் பறிமுதல் செய்யப்பட்டன. நெப்போலியன் போப் பயஸ் VI-ஐ பிரன்சுக்கு சிறைப்பிடித்து வந்தான். போப்பு அங்கே மரித்தான். போப்பு மார்க்கத் திலிருந்து விடுதலையும், வேதாகமம் பல மொழிகளில் புழங்குவதாலும் இது வெளிப்படுத்துதல் புஸ்தகத்தில் முன்கூட்டியே சொல்லப்பட்ட கிறிஸ்துவின் ஆயிரவருஷ அரசாட்சியை தொடர்ந்து வரும் "கொஞ்ச காலம்" என்றும், அவர்கள் தங்கள் முந்தய அதிகாரத்தையும் கௌர வத்தையும் அரசாட்சியையும் மறுபடியும் பிடித்து, அந்த ஆட்சி நிரந்தரமாக்கப்படும் என்று போப்பு தலைவர்களால் அறிவிக்கப்பட்டது.

போப்பு மார்க்கத்தின் இந்த ஆயிர வருஷம் வரலாற்று சரித்திரப்படி "இருண்ட யுகம்" என்றழைக்கப் படுகிறது. இந்த கால கட்டத்தில் பல தப்பறையான போதனைகளும் வழக்கங்களும் உட்புகுத்தப்பட்டன. இது ஐரோப்பா மற்றும் இதர ஜனங்களிடம் போப்பு மார்க்கம் கட்டாயப்படுத்தியது. உலகம் முழுவதையும் வெற்றி பெற வேண்டும் என்பதே அவர்கள் கோட்பாடாக இருந்தது. இதனை சிலுவைப்போரிலும் மத விசாரணையினாலும் வலுக்கட்டாயமாக செய்ய முயற்சிக்கப்பட்டது, ஆனால் அது பெரும் துன்பத்தை உண்டாக்கியது. அந்த இருண்ட நூற்றாண்டுகளில் போப்பின் தலைமைக்கும், மத குருக்கள் மற்றும் ஆசாரியர்களின் கீழ் இருக்கும் போலி சபையின் அதிகாரம் பெற்றவர்களுக்கு தலைவணங்க மறுத்ததால் பல லட்சகணக்காணவர்கள் துன்புறுத்தப் பட்டும், நாடு கடத்தப்பட்டும் பற்பலவிதமாய் கொலையும் செய்யப்பட்டார்கள். போப்பு மார்க்க அரசாங்கத்திற்கு முரண்பாடான கருத்துகளை உடையவர்களாக காணப் பட்டாலோ அல்லது அவர்களுடைய அதிகாரத்திற்கு நல்ல முறையில் தலை வணங்காதவர்களை கைது செய்து தண்டனைக்குட்படுத்த அதிகாரிகளும் துப்புகொடுப் பவர்களும் வேலையில் அமர்த்தப்பட்டார்கள்.

இவ்வாறாக, ஐரோப்பிய நாடுகள் புறமத வழிபாட்டுக்குள்ளும், தப்பறையில் இறங்கி, மூட நம்பிக்கைக்குள்ளும் உலகத்தில் தாங்கள் தேவனால் விஷேசமாக அங்கிகாரம் பெற்ற பிரதிநிதிகளாகவும் இருக்கிறோம் என்று பொய்யாய் சொல்லிக்கொள்ளும் மனுஷர்களுக்கு பெருமதிப்பும் கொடுக்கலானார்கள். ஆம், இவர்கள் தானியேலின் தீர்க்கதரிசனத்தில் சொல்லப் பட்டிருக்கிற தேவனுடைய மாய அப்போஸ்தலர்கள் ஆவர். (தானி. 7 : 25). இவர்கள் "காலங்களையும் பிரமாணங் களையும் மாற்ற நினைத்தவர்கள்." தேவனுடைய பிரமா ணங்களை மாற்றுவதற்கு அவர்களுக்கு ஆதரவுகளும் சாதகமான சூழ்நிலைகளும் உருவானதால் அதனை மாற்றுவதற்கு தங்களுக்கு அதிகாரம் இருக்கிறதென கருதினார்கள். நாங்கள் காண்பித்துள்ளப்படி கிறிஸ்துவின் அரசாட்சி காலத்தை அவர்கள் மாற்ற எண்ணினார்கள். கிறிஸ்துவின் "அன்றாட பலியை (எல்லாருக்காக ஒரே தரம்)" நீக்கி திருப்பலி பூசை (Mass) என்னும் அருவருப்பை ஸ்தாபித்தார்கள். திருப்பலி பூசையில் (Mass) கிறிஸ்து மறுபடியும் மறுபடியும் இரத்தமில்லாமல் பலியிடப்படுவதாக கோருகின்றனர். (தானி. 8 : 11). எல்லா பாவங்களையும் மன்னிக்கிறதற்கு கல்வாரியில் கிறிஸ்து ஒரே தரம் பலியிடப்படுவது போதுமானது என்று வேத வாக்கியங்கள் போதிக்கிறதை தள்ளிவைத்தார்கள். (S வால்யூம் 2, பாடம் 9).

இந்த இருண்ட கால மத தலைவர்கள் இந்த காரியங்களை அறிந்தே செய்கிறார்கள் என குற்றஞ் சாட்டுகிறதில்லை. அவர்களில் பலர் எதிராளியானவனால் வஞ்சிக்கப்பட்டு, நாங்கள் தேவனுடைய சித்தத்தை செய்கிறோமென்று எண்ணி கொள்கிறார்கள் என நம்புகிறோம். இந்த தப்பறைகள் சபையின் மீது படிப்படியாக வளர்ந்தது. அதின் தலைவர்கள் அதிகமான அளவில் குழப்பத்திற்கு ஆளானார்கள். ஒவ்வொருவரின் திறனை தேவன் ஒருவரே நியாயந்தீர்க்க வல்லவர். இப்படியாக புறதெய்வ வழிபாட்டிற்குள்ளான கிறிஸ்தவ மார்க்கம் புறமத தெய்வ வழிபாட்டுகளை விட ஐரோப்பா நாடுகளில் அதிக மூர்க்கத்துடனும் கருணையில்லாமலும் கட்டாயத்தினாலும் வளர்ந்தது. அது முன்பும் இப்பொழுதும் "கிறிஸ்தவ மார்க்கம்" - கிறிஸ்துவின் ராஜ்யம் என்று அழைக்கப் படுவதாயிற்று. உயிர்தெழுதல் என்ற மகிமையான வேத போதனை பின்னாகப் போடப்பட்டது; மரிக்க முடியாத சாவாமையுள்ள ஆத்துமாவாக இருந்தால் மரணத் திலிருந்து உயிர்த்தெழுதலின் பயன் என்ன? மரணத்தின் உண்மையான எண்ணத்தை விட பிளேட்டோவின் போதனையான மனிதனின் அழியாமை மாம்ச மானவர்களுக்கு மிகவும் ஒப்புகொள்ளகூடிய தாயிருந்தது. மரணம் மனிதனின் எதிரி என்று எண்ணுவது சிறந்ததல்ல, ஆனால் ஆதாமின் பாவத்தினால் தேவன் கொடுத்த தண்டனை என்பதே சரியாகும். (ஆதி. 2 : 17).

## சீர்திருத்தங்கள் "ஒர் சிறு உதவி"

### THE REFORMATION "A LITTLE HELP"

சீர்திருத்த வேலைகள் கடுமையான எதிர்ப்பின் மத்தியிலும் படிப்படியாக வளர்ந்தது. பதினாறாம் நூற்றாண்டில் மகா சீர்திருத்தங்களை கொண்டு வந்தது. அது அவருடைய உண்மையான சபையாகிய நொறுக்கப் பட்ட பரிசுத்தவான்களுக்கு துன்பத்திலிருந்தும், கொலை களிலிருந்தும் சிறு அளவில் விடுதலை கிடைத்தது. இருண்ட யுகத்திலுள்ள இருண்ட வருஷங்களில் கூட சில பரிசுத்தவான்கள் பாகாலுக்கு முன்பாக ஒருபோதும் தலைவணங்கவில்லை. இது அவர்கள் வேத வாக்கியங் களிலுள்ள போதனைகளில் வைத்திருக்கும் விசுவாசத்தின் அடையாளமாக அவர்கள் இரத்தத்தினால் முத்திரை யிடபட்டது. ஆனாலும், குறித்த சமயத்தில், அவர்களுடைய

போதனைகள் கணிசமான நன்மையை சீர்திருத்தங்கள் வாயிலாக கொண்டுவந்தன. அவைகள் பரிசுத்தவான்களுக்கு "ஓர் சிறு உதவியாக" இருந்தன. அவர்களின் தலைவர்கள் முகஸ்துதியினாலும், முடிந்தமட்டும் போலியாக பணிந்து அதிகாரத்தை பெற விரும்பியும் தேசங்களிடையே செல்வாக்கையும் பெற்றார்கள். (S வால்யூம் 3, பக்கம் 34-39, 108-113).

## கேள்வியும் அதின் பதிலும்

### QUESTION AND ITS ANSWER

தேவன் ஏன் இந்த திகைக்க வைக்கும் காரியங்களை அனுமதித்தார் என்று சிலர் கேட்கலாம்? ஏன் அவர் தன்னுடைய கோதுமை நிலத்தில் களைகளை வளர விட்டார்? நம்முடைய கர்த்தர் அவருடைய கோதுமை மற்றும் களை பற்றிய உவமையில் காட்டியபடி இந்த காரியங்கள் பின்னர் வளரும் என்று முன்பே அறிந்திருந்தார். இது தேவனுடைய திட்டத்தின்படி அனுபவத்தினால் சபையும், தூதர்களும், முடிவாக உலக மனுக்குலமும் ஒரு சிறந்த பாடத்தை கற்றுகொள்ள அனுமதித்தார். இந்த தப்பறைகள் தேவனுடைய பிள்ளைகளுக்கு பரிசுத்தமற்ற குறிக் கோள்களையும் பாவத்தையும் உண்டாக்கியது. இது தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்களை பெரும் திரளான களை வகுப்பாரிடமிருந்து ஆவியினால் பிரித்து வளர செய்தவற்காகும். இரண்டும் பாபிலோன் முறையில் அறுவடை மட்டும் சேர்ந்து வளரவிடப்பட்டது. அதன்பின் இரு வகுப்பாரையும் அதாவது உண்மையான கிறிஸ்தவர்களையும் தப்பறையான கிறிஸ்தவர்களையும் முழுவதுமாக பிரிக்கும் காலம் வந்தது.

இந்த தப்பறைகளும் தீய வழக்கங்களும் தேவனால் உண்டானவைகளல்லவென்றும் அவருடைய வார்த்தைகளில் அவை போதிக்கப்படவில்லையென்றும் நாம் காணலாம். "பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப் படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்வார்கள்" என்று நமது எஜமானர் முன்னறிவித்திருக்கிறார். மிகுதியான பேர் கிறிஸ்தவர்கள் இருண்ட கால புகையினால் இன்னும் குருட்டாட்டத்தில் இருக்கின்றனர். அந்த புகை இன்னும் அவர்களது கண்களில் நிறைந்திருக்கிறது. தற்போதைய காலத்தில், தேவனுடைய ஜனங்களுக்கு வன்முறையால் தீமை விளைவிக்க கூடியவைகள் அதிகமாக இல்லை. ஏனென்றால் அவை நீதியான சட்டங்களினாலும், சமுதாய இரக்கத்தினாலும் கட்டுபடுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் சிலரிடம் இந்த துன்புறுத்தும் ஆவி இருந்தாலும்கூட அவை முன்னை காட்டிலும் வலுவுள்ள தாக இல்லை. முன்பு போலவே வேத வாக்கியங்களில் இல்லாத போதனைகள் இப்பொழுதும் நம்முடைய நாட்களுக்கு தகுந்தவாறு சில கருத்துகள் மாற்றப்பட்டு போதிக்கப்படுகின்றன. உண்மையான வேதாகம போதனைகளான மரித்தோர் உயிர்தெழுதலும், இழந்து போனதை திரும்ப கொடுத்தலும் தொலைந்து போயின.

தற்கால ஊழியக்காரர்கள், வேத வாக்கியங்களில் உயிர்தெழுதலை குறித்து சில நேரங்களில் வாசித்தாலும், வசனங்களில் சொல்லப்படாத மாறுபாடான விளக்கங்களை நேரடியாக கொடுக்கிறார்கள். இன்னும் சிலர், இறுதியில் சரீரம் உயிர்தெழுந்து ஆவியோடு சேருமென்றும் பிரசங்கிக்கிறார்கள். இது வேதாகமத்தில் எங்குமே போதிக்கப்படாத போதனையாகும். ஆத்துமா அழியாது என்றும் மரணத்தில் அவர்கள் சொல்கிறபடி இடப்பெயர்ச்சி செய்யப்பட்டு நித்திய வீட்டிற்கு செல்வதாக கூறும் சொந்த கருத்து முற்றிலும் புத்தியீனமானது. வேதாகமம் நமக்கு, மரித்தோர் மரணத்திலிருக் கிறார்களென்றும் மரணத்திலிருந்து ஒரு ஆள், ஒரு மனிதன், அதாவது ஆத்துமாவின் உயிர்தெழுதல் உண்டென்றும் அதாவது அந்த ஒருவருக்கு அந்த ஜீவிக்கு உயிர்த்தெழுதல் உண்டென்றும் போதிக்கிறது. ஆதாமுக்குள் மரித்த மனுக்குலத்தை திரும்ப வாங்குவதற்காக அவர் மரித்தார்; இயேசு தம்முடைய பிதாவால் மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார். சரீரமானது மரணத்தில் "அழிக்கப்பட்டு" ஆவி கட்டிலிருந்து விடுதலையானால் விடுதலையான அந்த ஆவிக்கு வெகுகாலம் கழித்து திரும்பவும் அந்த சரீரத்தைப் பெற வேண்டிய அவசியம் என்ன? இப்படி விடுதலையான ஆவி ஜீவிக்கு பல நூற்றாண்டுகள் கழித்து திரும்பவும் அதே பழைய மானிட சரீரத்தை பெறுவது நிச்சயமாகவே அந்த ஆவி ஜீவியை எத்தகைய நித்திய கீழான நிலைக்கு கொண்டு செல்வதாகும்? எத்தகைய புத்தியீனமானது.

இன்றைய சபை அமைப்புகள் எல்லா விதங்களிலும் புற மத போதனைகளினாலும் நன்நடத்தையின்மையாலும் கிரேக்கு மற்றும் ரோம தத்துவங்களினாலும், தேவதை வழிபாடு, புத்த மதம், பகுத்தறிவு வாதம் மற்றும் ஆவி மார்க்கத்தினாலும் முழுவதுமாக களங்கம் ஏற்பட்டுவிட்டது. ஆத்துமா அழியாதென்றும், திரித்துவ தேவர்கள் ஒன்றே என்பதும், மரணத்திற்குபின் வாதித்தல், மரணத்திற்கு பின் ஆத்துமா மறுஜன்மமெடுத்தல், உயிரோடிருக்கிறவர்கள் மரித்தோரோடு பேசுதல், முதலிய யாவும் புற மதஸ்தவர்களிடம் இருந்து எடுக்கப்பட்டதும் முழுவதுமாக புறஜாதிகளுடைய வழக்கமாகும். குழந்தை பலாத்காரம், ஓரினச்சேர்கை முதலியவற்றையின் வருகையால் பொதுவாக ஒழுக்கங்களும் ஆவிக்குரிய தன்மையும் எல்லாவிடங்களிலும் சீர்கேடடைந்துவிட்டது. உண்மையாகவே, சபை அமைப்புகள் இன்றைக்கு பாபிலோனாக, குழப்பமாக ஆகிவிட்டது! இந்த யுகத்தின் அறுவடை காலத்தில், தேவன் அவருடைய ஜனங்களை அவைகளிடமிருந்து வெளியே அழைக்கிறார். இந்த மதசார்ந்த அமைப்புகளை அவருடைய வாயினின்று "வாந்தி" பண்ணிப்போட்டார். (வெளி. 3 : 14-20; 17 : 1-5; 18 : 1-24; 19 : 1-8).

ஒரு காலத்தில், தேவன் இந்த காரியங்களை ஏன் அனுமதித்தார் என நாம் வியந்தோம். ஆனால் இப்போது பிரகாசிக்கிற வெளிச்சத்தினால் நாம் அந்த காரணத்தை

நன்றாக புரிந்து கொள்ள முடியும் என நம்புகிறோம். நாம் இப்பொழுது எதை பாராட்டுகிறோம் என்பதை தேவன் பார்க்கிறார்; அதாவது, நாம் பாவத்தின் தன்மையையும், அதின் விளைவுகளையும் அறியாதிருந்தோமானாலும், இந்த பயங்கரமான போதனைகள் விளைவிக்கக்கூடிய விஷத்தன்மையையும் அறியாதிருந்தோமானாலும், நாம் சத்தியத்தை பாராட்ட முடியாதவர்களாயிருப்போம். பாவத்தினாலும் அதின் விளைவுகளினாலும் கட்டப்பட்டு ஆதிக்கம் செய்யப்பட்டவர்கள் ராஜ்யத்தின்போது தீமை யினால் கிடைத்த அனுபவத்தின் அனுகூலங்களை ஒப்புக்கொள்வார்கள்.

நாம் இந்த மகா இருளிலிருந்து வெளியே வந்து மகிமையான வெளிச்சமாகிய தேவனுடைய சத்தியத்திற்கு வந்த போது நம்முடைய மனதிலும் இருதயங்களிலும் எவ்வளவு ஆச்சரியமான நிம்மதி வந்தது! இதனால் சுவிசேஷ யுகத்திலிருந்து ராஜ்யத்திற்குள் கடந்து செல்லும்போது அது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வெளிச்சம் எப்பேற்பட்ட ஆச்சரியமான உணர்வுகளை நம் மீது ஏற்படுத்தின! நாம் கொஞ்சம் கற்பனை செய்துப் பார்ப்போம். உலகத்தார் மரண நித்திரையிலிருந்து விழித்தெழும்பி அவர்கள் ஏற்கனவே கற்பிக்கப்பட்ட காரியங்களை நோக்கி பார்ப்பார்கள், அதாவது இந்த தற்கால ஜீவியத்திற்கு பிறகு தாங்கள் இப்படியெல்லாம் ஆகிவிடுவோம் என்று போதிக்கப்பட்டிருக்கிறார்கள். பலர் சாத்தானையும் அவனுடைய நெருப்பான அக்கினி யையும் சித்திரவதை யையும் சுற்றிமுற்றி பார்ப்பார்கள், ஆனாலும் அவைகள் காணப்படமாட்டாது. மாறாக, அவர்கள் தேவனுடைய அன்பையும் அவர்களுக்காக தேவன் செய்த அற்புதமான காரியங்களையும் உணர்வார்கள். அவர்கள் மேசியாவின் நீதியான அரசாட்சிக்கு அறிமுகம் செய்து வைக்கப் படுவார்கள். அங்கு அக்கினி இருப்பதில்லை, ஆனால், எல்லா ஜனங்களுக்கும் ஆசீர்வாதம் மட்டுமே இருக்கும். ஏழைகளும், குருடரும், பாவத்தினால் சாபமிடப்பட்டதுமான மனுக்குலத்துக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கும். (வெளி. 21 : 6)!

நிச்சயமாக, நேர்மையான இருதயமுள்ளவர்களும் நன்மை செய்ய விருப்பமுள்ளவர்கள் எல்லாரும், காரியங்கள் சாதகமாக மாறும் போது இதுவரையும் பாராட்டாத மாபெரும் சிருஷ்டிகரின் மகிமையான குணாம்சத்தைப் பாராட்டுவார்கள். ஆறாயிரம் வருஷங் களாக தீமையின் காரியங்கள் நீடிக்க அனுமதிக்கப் பட்டிருந்தாலும் தேவன் பிற்காலத்திற்குரிய திட்டங்களை வைத்திருந்தார் என காண முடிகிறது. இந்த ஒழுங்குகள் ஆவிக்குரிய வகுப்பாருக்கு பரலோக வீடும், மனித குலத்திற்கும் பல்வேறு படிகளில் வாழும் அவரது எல்லா ஞானமுள்ள சிருஷ்டிகளுக்கும், பரிபூரணமான பூமிக்குரிய வாழ்வும் இன்னும் இந்த மகா அண்டசராசரங்களில் சிருஷ்டிக்கப்படயிருக்கிற சிருஷ்டிகளுக்குரிய ஆயத்தங் களும் உள்ளடங்கியது ஆகும். “அவருடைய கர்த்தத் துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்திற்கும் முடிவில்லை.” (ஏசா. 9 : 7). தேவன் காரியங்களை முழுவதும் தெளிவுப்படுத்தும் போது, எல்லாரும் அவருடைய வழிகள் நியாயமும் நீதியுமாய் இருப்பதை காண்பார்கள் என நாம் நம்பிக்கையோடு எதிர்பார்க்கி றோம். அவர் தம்முடைய குணாம்சத்தை குறித்த காலத்தில் முழுவதும் வெளிப்படுத்த அவருக்காக காத்திருக்கிறோம்; இப்பொழுது அந்த காலம் சமீபமாயிருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

* * *

# மேசியா – தேவனுடைய தாசன்

**MESSIAH – GOD'S SERVANT**

***“என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்”***

***ஏசா. 53 : 11***

இலக்கணப்படி தெரிவிப்பதென்றால் “அவருடைய அறிவினால்” (by His knowledge) என்கிற சொற்றொடர் தேவனுடைய ஊழியக்காரர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவைக் குறிக்கும். அதனை ஆதாரப் பொருளாகவும் கருதலாம், (ஒத்துப்பார் ஏசா. 11 : 1-5) அல்லது இது மற்றவர்களால் அனுபவப்பட்டிருக்கிறபடி “அவரைப் பற்றும் அறிவினால்” என்று அர்த்தம் கொள்ளும் செய்யப்படு பொருளாகவும் (object) கருதலாம். இருப்பினும் இரண்டுவித கருத்துக்களையும் சரி என ஏற்றுக் கொள்ளலாம். இரண்டாவது சொல்லப்பட்டிருக்கும் கருத்தை நாம் கவனிப்போம்.

இங்கு அறிவு என்கிற பதத்தை சுட்டிக்காட்ட பயன்படுத்திருக்கும் எபிரேய வார்த்தை da ath டா அத். இது அனுபவப்பூர்வமான அறிவு என்கிற கருத்தையும் கொடுக்கும். அதாவது செயல் முறையின்படி அறிந்து கொள்ளும் அறிவாகும். தேவன் இஸ்ரவேல் மக்களைக் குறித்து அவர்கள் வனாந்தரத்தில் இருந்தபோது பின் வருமாறு கூறினார். (சங். 95 : 10). “அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும்” கூறினார். அவர்கள் தேவனைப் பற்றிய வழிகள் எவைகள் என்பதை சொல் அளவில் அறிந்திருந்தார்கள். ஆனால் அவற்றை தங்களுடைய வாழ்க்கைப் பயணத்தில் தங்களுடைய வாழ்வோடு ஒன்றினைந்து இருக்க வேண்டுமென்கிற

செயல்முறை அனுபவத்திற்கு அவர்கள் வரவில்லை. அவைகளை தங்களின் இருதயத்தில் ஏற்று அதன்படி அப்பியாசிக்க மனதில்லாதிருந்தார்கள். ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும் நீர் பாவ நிவராண பலியாக அனுப்பி வைத்த உம்முடைய குமாரனும் தாசனுமாகிய மேசியாவை அறிவதே நித்திய ஜீவன். இவை, சொல் அளவில் மாத்திரமே பெற்ற அறிவாக இருக்குமாகில் அது போதுமானதல்ல. இந்த அறிவு அனுபவத்தின் மூலம் பெற்றதோர் அறிவாக இருதயப் பூர்வமான அறிவாக இருக்க வேண்டும். இங்கு ஒரு வேளை "என்னுடைய நீதிபரராகிய தாசன்" என்பதே எபிரேய வாசகத்தில் கருத்தாக இருந்தால் எபிரேய பாஷையில் தாசன் என்ற வார்த்தை முதலில் வந்திருக்கும். எப்படியெனில் எபிரேய மொழியில் பொதுவாக கடைபிடிக்கும் விதிமுறை என்னவென்றால் ஒரு வாக்கியத்தில் அதில் பேசப்படும் பொருளை அடுத்து வரும் வார்த்தை அந்தப் பொருளை விவரிக்கும் வார்த்தையாக கருதப்படும். ஆனால் இங்கு நீதிபரர் - Righteous என்கிற வார்த்தை தாசன் servant என்கிற வார்த்தைக்கு முன்னதாக இடம் பெற்றிருக்கிறது. அத்துடன் அதற்கு தனி முக்கியத்துவமும் வழங்கப் பட்டிருக்கிறது. எப்படியெனில் நீதியாய் இருப்பவரே நீதிபரராக இருக்க கூடும் என வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அவர் ஒருவரே நீதிபரராக இருப்பவர். அவரைக் குறித்த அறிவின் மூலம் அநேகருக்கு நீதி போய்ச் சேரும். மேலும் அதன் விளைவாக நீதிபரர் என்கிற பண்பு அவரிடத்தில் இருப்பதால் மாத்திரமல்ல (இதுவும் மிகவும் அவசியமாக கருதப்படுவதாலும்) ஆனால் குறிப்பாக அவர் தேவனுடைய தாசனாக இருக்கிறபடியால் (My Servant என்னுடைய தாசன்) அவர் தம்முடைய மகிமையைக் களைந்துப் போட்டு, அதாவது இந்த பூமி உருவாவதற்கு முன்னர் அவர் பிதாவோடு இருக்கையில் அவருக்கு இருந்த மகிமையை விட்டுவிட்டு அவர் மாம்சமாக்கப்பட்டார். அவர் பாவமில்லாத பரிபூரண மானிட ஜீவியானார். அவர் இப்படிச் செய்ததின் காரணம் என்னவென்றல் ஆதாமும், அவனுக்குள் பிறவாது இருந்த அனைத்து மானிட இனமும், ஆதாமின் சந்ததி அவன் பாவம் செய்யும் போது அவன் தன்னுடைய ஜீவனையும் தனக்குள் பிறவாது இருந்த சந்ததிகளின் ஜீவனையும் இழந்து விட்டான். ஆகையால் அவர் ஓர் மீட்கும் பொருளாக அல்லது ஈடுகிரையமாக, தேவனுடைய கிருபையினால் ஆதாமுக்காகவும் ஒவ்வொருவருக் காகவும் மரணத்தை ருசி பார்த்தார். (ஆதி. 2 : 17; யோபு 14 : 4; சங். 51 : 5).

## ஓர் மீட்கும் பொருள்

### A RANSOM

ஆனபடியினால், அவரின் நீதியின் அடிப் படையில், குறிப்பாக தேவனுடைய தாசனாக, தம்முடைய பரிபூரண மானிட ஜீவனை ஆதாமுக்கும் அவன் சந்ததிக்கும் சரிநிகரான கிரயப் பொருளாக சமர்பிக்கையில், அவர் தம்மைத் தாமே யாவருக்காகவும் ஒரு சரிநிகரான கிரயப் பொருளாக கொடுப்பதின் மூலம் அநேகருக்கு நீதியை கொண்டு வருகிறார். அவர்கள் யாராக இருந்தாலும், இஸ்ரவேலர்களுக்கு மாத்திரமல்ல மனித இனத்தவர் யாவரையும் நீதிமான்களாக்குகிறார். (எப்படியெனில் ஆபிரகாமின் வித்தாகிய நிறைவேறுதலான ஈசாக்கின் மூலம், இந்த பூமியில் உள்ள வம்சங்கள் யாவும் ஆசீர்வதிக்கப்படும்.) இது எப்படி நடக்குமென்றால் அவரைக் குறித்தும் அவருடைய "நீதியான வழிகளைக்" (ஏசா. 2 : 2) குறித்தும் "தங்களுடைய இருதயங்களில்" பெறும் தனிப்பட்ட அனுபவப் பூர்வமான அறிவின் மூலமாகவே ஆகும். தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதற்கு (சீர்படுவதற்கு) முன்னதாக இவர்கள் மேசியாவோடு ஓர் நெருங்கிய உறவிற்குள்ளும் இருதய இசைவிணக்கத் திற்குள்ளும் வர வேண்டும். அத்துடன் நித்திய ஜீவனை அவரிடமிருந்து ஓர் வெகுமதியாக பெற்றுக் கொள்ள வேண்டும். (தானி. 12 : 2). "அப்படியே அவர் அநேகம் ஜாதிகள் மேல் தெளிப்பார்." (ஏசா. 52 : 15).

"அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்து கொள்வார்." இது தேவனுடைய தாசன் மறுபடியும் சிலுவையில் அறையப்பட வேண்டும் என குறிப்பிடவில்லை. இது, அவர் தமது முதல் வருகையின்போதே செலுத்தின ஈடுபலிக்கு அப்புறம் நிகழ்வதாகும். அவர் நீதியின் சிங்காசனத்தின் முன்பு (தாம் ஈடு செய்ய கொண்டுவந் திருக்கும் பரிகாரத்துடன்) யாருக்காக பாவ நிவாரணம் செய்யப்பட வேண்டுமோ அவர்கள் நிமித்தம் அந்த பலியின் இரத்தத்துடன் தோன்ற வேண்டும். அவர்களின் அக்கிரமங் களை சுமந்தபடி அவர்களுக்குப் பதிலாக நீதியை சரிகட்ட வேண்டும். அது மிகவும் அத்தியாவசியம் கொண்டதாகும். இது அவர்கள் நிமித்தம் நிறைவேறுதலான பிரதான ஆசாரியராக நடப்பிக்க வேண்டும். இது அவர் அவரைப் பற்றிய அவர்களுடைய அறிவினாலே நீதியை அவர்களுக்கு கொண்டுவந்து, அத்துடன் நித்திய ஜீவனையும் அவர்களுக்குக் கொடுப்பார்.

## புதிய உடன்படிக்கை

### NEW COVENANT

நிழல் அடையாளத்தில் பிரதான ஆசாரியன் ஆண்டிற்கு ஒரு முறை செலுத்தப்படும் பாவ நிவாரண நாளின் போது பாவ நிவாரண பலி செலுத்தி முடித்த பின்பு, இரத்தத்தை எடுத்துக் கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குட் பிரவேசித்து கிருபாசன பெட்டியின் மீது (the mercy sent) இரத்தத்தை தெளிப்பார். (லேவி. 16 : 14-17, 33, 34). இதனை அதன் விளைவாக நேரிடும் ஆசீர்வாதங்களை பெற்று சந்தோஷம் பெறுவதற்கு முன்னர் அதனை செய்வார். (லேவி. 9 : 22, 23 உடன் ஒப்பிடுக). அதுமட்டுமல்ல, பழைய நியாயப்பிரமான உடன்படிக்கை கொடுக்கப்பட்ட போது அது சம்பந்தமாக அடையாளத்தில் காட்டப்பட்டபடி தேவன் இஸ்ரவேலரின் பன்னிரண்டு கோத்திரத்தாருடனும் செய்யவிருக்கும் (யாத். 24 : 6-8) புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக மேசியா (எரே. 31 : 31-34; எசே. 36 : 24-28) நிறைவேறுதலான பலி பீடத்தின் மீதும் அதன் பிற்பாடு அது ஜனங்கள் மீதும் தெளிப்பார்.

நமக்காக ஓர் மானிட ஜீவியாக மரித்த அவர் நம்மை நீதிமானாக்குவதற்காக ஓர் ஆவியின் ஜீவியாக மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டார். மேலும் அவர் நம்முடைய மீறுதல்களை சுமப்பதற்காக எப்போதும் ஜீவிக்கிறார். முதலில் "தமக்காகவும் தம்முடைய வீட்டாருக்காகவும்" (லேவி. 16 : 10) அவருடைய ஊழியக் காரர்களுக்கும் ஊழியக்காரிகளுக்கும் பரிந்து பேசுப வராகிறார்.(யோவே. 2 : 29). அதன் விளைவாக தேவனுடைய பரிசுத்த ஆவி அந்நாட்களின் போது யாவர் மேலும் ஊற்றப்படுகிறது. அந்த நாட்கள் என்பது சுவிசேஷ யுகமாகும். இதில் இப்போது நிகழ்ந்துவரும் இக்கட்டுக் காலமும் உள் அடங்கும். இது குறித்து யோவே. 2 : 1-27 வசனங்களில் விவரித்துக் கூறப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்பு, அதிவிரைவில் (இவைகள் யாவும் நடந்தேரியபிற்பாடு, யோவே. 2 : 28). தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை மாம்சமான யாவர் மேலும் ஊற்றுவார். – ஆதாமின் சந்ததியின் மேல் மொத்தமாக தேவன் தம் ஆவியை ஊற்றுவார். – ஏன்னென்றால் இக்காலத்தின் போது இரண்டாம் முறையாக மேசியா நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்திற்கு முன்பாக தமது ஜனங்களுக்காக தோன்றுவார். (லேவி. 16 : 15). அவர்களின் மீறுதல்களை சுமப்பதற்காக, தம்முடைய சரி நிகரான கிரயப் பொருளைக் கொண்டு ஆதாமையும் அவனுடைய சந்ததியையும் விலை கொடுத்து வாங்குவார். ஆனபடியினால் தேவனுடைய தாசனாகிய நீதிபரர் தம்முடைய அறிவின் மூலம் அநேகரை, அந்த நீதிமானாக்குவார். அவர்களின் பிரதான ஆசாரி யராக அவர் அவர்களின் மீறுதல்களை தாமே சுமந்து, பரலோகத்தில் இருக்கும் நியாயாசனத்தில் அவர்களின் பாவங்களுக்கு பாவ நிவாரணம் செய்வார்.

## மேசியாவின் மகிமை பொருந்திய பங்கு

### MESSIAH'S GLORIOUS PORTION


*"அநேகரை அவருக்கு பங்காக கொடுப்பேன்."* அநேகம் - abundand என்று பொருள்படும் ராப் என்கிற அதே எபிரேய வார்த்தை தான் இங்கேயும் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. (அநேகம் என்று கூறும் போது அது அளவு, எண்ணிக்கை பருமன், வயது, தரம், நிர்ணயம் ஆகியவற்றை உள் அடக்கியது ஆகும்). ஏசா. 53 : 11-ல் உபயோகித்திருக்கிறபடியே ஏசா. 53 : 12-லும் உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. ஆனபடியினால் (ஏனென்றால் நீதிபரராகிய தேவனுடைய தாசன் அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்து கொள்வார்) தேவன் அநேகரை அவருக்கு பங்காக கொடுப்பார். இதில் அவருடைய சொந்த ஜனமாகிய இஸ்ரவேலர்கள் மாத்திரமல்லாமல் (எரே. 31 : 31-34; 32 : 37-44; எசே. 11 17-20) புறஜாதிகளின் மற்ற எல்லா தேசத் தாரையும், இரட்சித்து ஆசீர்வதிப்பார். (ஆதி. 22 : 18; எசே. 16 : 53-63; சங். 86 : 9; ஏசா. 66 : 18). அவர்களுக் காக அவர் கொடுத்திருக்கும் சரிநிகரான கிரயப் பொருளின் அடிப்படையில் மேசியா தேவனிடம் கேட்பார். அதன்படி தேவன் அவருக்கு ஜாதிகளை சுதந்தரமாகவும் பூமியின் எல்லைகளை அவருக்கு சொந்தமாகவும் கொடுப்பார். (சங். 2 : 8). "ஒரு சமுத்திரம் தொடங்கி மறு சமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும் அவர் அரசாளுவார் ...... சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள். (சங். 72 : 8-11).

## கொள்ளையாடியதை பங்கிடுதல்

### DIVIDING THE SPOIL

"பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார்." விசுவாசத்தில் பெலமுள்ளவர் களும் கிரியைகளில் வல்லவர்களுமான யாவற்றையும் மேற்கொண்டவர்களுடன் தமது வெற்றியின் வெகுமதியாக கிடைத்த கொள்ளைப் பொருள்களைப் பங்கீடு செய்வதில் அவர் மகிழ்ச்சியடைவார். அவர்கள் (1) அவருடைய மணவாட்டி வகுப்பார். அவர்கள் தான் ஆட்டுக் குட்டியானவரின் மனைவி, சிறு மந்தை வகுப்பாரும் அவர்களே. முற்றும் ஜெயம் கொண்டவர்களும் அவர்களே. அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் அவர்களே. அவருடைய ராஜஸ்திரியாக தெய்வீக சுபாவத்தை – ஓபீரின் தங்கத்தை அணிந்து கொண்டவள்" (சங். 45 : 9-11, 13, 14). (2) அடுத்தது திரள் கூட்டத்தார் – "அவள் பின்னாலே செல்லும் தோழிகளாகிய கன்னிகைகள்." (சங். 45 : 14, 15; ஆதி. 24 : 61; உன்னத. 6 : 8) அடுத்தது ஜெயங்கொண்ட பூமிக்குரிய வகுப்பார். இவர்களும் உண்மையிலேயே விசுவாசத்தில் பெலனுள்ளவர்களும் கிரியைகளில் வல்லமை பொருந்தியவராக இருப்பார்கள். (3) இவர்களுள் முதன்மையானவர்கள் மூப்பரான விசுவாசிகள். Ancient Worthies. இவர்களைத்தான் "மூப்பர்" (செகிநிம்) என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. யோவே. 2 : 28-ல் மூப்பர் (Old men) என்றும் ஏசா. 24 : 23-ல் மூப்பர்கள் (ancients) என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தங்களின் மரணம் என்கிற நித்திரையிலிருந்து எழும்புவார்கள். கொள்ளை யாடியதால் பெற்ற வெற்றியை பங்கு போட்டுக் கொள்வார்கள். இது எதற்கு முன்னர் வரும் என்றால் "சந்திரன் கலங்கும். சூரியன் நாணமடையும் (சந்திரன் – அதாவது சாத்தானின் திரண்ட எண்ணிக்கை கொண்ட பிசாசுகளின், வெளிச்சமானது, அவனுடைய தப்பறைகள் மற்றும் வஞ்சகங்களின் பிரதிபலிப்புகள் ஆகும்). (சூரியன் – சாத்தான் இப்போதுள்ள பொல்லாத உலகத்தின் தேவனாக இருக்கிறான். அவன் மங்கி வெளிரிப்போவான். ஆயிர வருஷ நியாயத்தீர்ப்பு நாளில் அவன் கட்டப்பட்டிருப்பான். இதனால் அவன் அதின் முடிவுரைக்கும் ஜாதிகளை மோசம் போக்க இயலாது. அப்போது மனுக்குலத்தின் இறுதி கட்ட சோதனை நடந்தேரும்.) மேசியா தான் கொள்ளையாடியதை (4) வாலிபரான விசுவாசிகளுடன் பங்கு போடுவார். இவர்கள் தான் தெரிந்து கொள்ளப்பட்ட இறுதி வகுப்பார். இவர்கள் இந்த மகா உபத்திரவக் காலங்களின் போது கொண்டு வரப்பட்ட வகுப்பார். (தானி. 12 : 1). இவர்களைக் குறித்து யோவே. 2 : 28-ல் வாலிபர் என மேற்கோள் காட்டப் பட்டிருக்கிறது. இவர்கள் மூப்பரான விசுவாசிகளோடு இணைக்கப்பட்டு பூமியிலே பிரபுக்களாக இருப்பார்கள்." (சங். 45 : 16; ஏசா. 32 : 1).

இந்த தெரிந்து கொள்ளப்பட்ட நான்கு வகுப்பாரும் ஆசரிப்புக் கூடாரத்தின் சுற்றிலும் இருந்த நான்கு லேவியர் வகுப்பார் மூலம் சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறார்கள். கிழக்கு பக்கத்தில் ஆசாரியர்களும், அதன் வட பகுதியில் மெராரியர்களும் அதன் தெற்குப் பகுதியில் கோகாத்தியரும் அதன் மேற்குப் பகுதியில் கெர்சோனியரும் இடம் பெற்றிருந்தனர். (எண் 1 : 47-50; 3 : 17-38). இவர்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரிடமிருந்தும் பிரித்து எடுக்கப்பட்டவர்களாவார்கள். இஸ்ரவேல் கோத்திரத்தார் ஆசரிப்பு கூடாரத்திலிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் பாளையம் கொண்டிருந் தார்கள். இவர்கள் இவ்வுலகைச் சேர்ந்த மனுக்குலத்தை பொதுவாக அடையாளப்படுத்துகிறார்கள். இவர்கள் தேவனுடைய தெரிந்தெடுக் கப்பட்ட வகுப்பாராகிய நிறைவேறு தலான ஆசாரியர்கள் மற்றும் லேவியர் மூலமாக ஆசீர்வதிக்கப் படுவார்கள். (எண். 1 : 52, 53; 2 : 2, 33, 34). இந்த நான்கு வகுப்பார், சாபமாகிய ஜலப்பிரளயத் திலிருந்து நோவாவின் பேழையில் காக்கப்பட்ட நான்கு மனித ஜோடிகள் மூலம் சித்தரித்துக் காட்டப்பட்டிருக் கின்றனர். மேலும் எருசலேமில் உள்ள நான்கு பர்வதங்கள் – சீயோன், அக்காரா, மொரியா, பெசிதா ஆகிய இவைகளின் மூலமாகவும் சித்தரித்துக் காட்டப்பட்டிருக் கின்றனர். (சங். 121 : 1; 72 : 3; 87 : 1; ஏசா. 49 : 11, 13; 55 : 12). மேலும் வேதாகமத்தில் இன்னும் அநேக விதங்களில் இந்த வகுப்பார் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறார்கள்.




இறுதியாக தேவனுடைய தாசன் தாம் கொள்ளையாடிய பொருளை அடையாளமான "குமாரர்" "குமாரத்திகள்" ஆகிய இவர்களுடன் விரைவில் வர இருக்கும் மேசியாவின் ராஜ்யத்தில் இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் காலங்களின் போது பகிர்ந்து கொள்வார். (யோவே. 2 : 28; ஏசா. 60 : 4). இந்த வகுப்பார் பெயர் குவாசி எலெக்ட் (அரைகுறையாக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்) ஆகும். (பொதுவாக கூறுவ தென்றால் இந்த வகுப்பாருள் பிரதிஷ்டை செய்த மற்றும், பிரதிஷ்டை செய்யாத விசுவாசமுள்ள யூதர்களும் புறஜாதியாரும் இதில் அடங்குவர்.) குமாரத்தி என்பது தெரிந்து கொள்ளப்படாத வகுப்பார் ஆவார்கள். (அதாவது விசுவாசியாதோரும், பெரும் எண்ணிக்கை கொண்ட மனுக்குலத்தாரும் அடங்குவர்). இந்த வகுப்பார், ஆசரிப்பு கூடாரத்தைச் சுற்றிலும் பாளையம் அமைத்து இருந்த 12 கோத்திரத்தார் மூலம் அடைாளம் காட்டப்பட்டிருக்கின்றனர். இவர்கள் லேவியர் கோத்திரத்தாரிலிருந்து வித்தியாசப் படுத்தப்பட்டவர்கள். லேவியர் மற்றவர்களிடமிருந்து பிரித்து எடுக்கப்பட்டு ஊழியம் செய்பவர்கள்.

மேசியாவின் நீதியான ஆட்சியின்கீழ் தேவன் இந்த பூலோகத்தின் மக்கள் அனைவரும் வரும்படி அழைப்பார். நீதியின் சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசைவரைக்குமுள்ள பூமியை (மனுக் குலத்தை) அவர் கூப்பிடுகிறார். பூரண வடிவுள்ள சீயோனிலிருந்து (ராஜ்யத்தின் பரலோக பகுதி) தேவன் பிரகாசிப்பார். (சங். 50 : 1, 2; மல்கி. 4 : 2; ஏசா. 2 : 3). அதன்பின்பு தேவன் இந்த பூமியின் குடிகளை (பாளை யத்தில் இருப்போரை) நீதிமானாகுதலுக்கும் பிரதிஷ்டை செய்வதற்கும் கூப்பிடுவார். "பூமியின் எல்லையெங்கும் உள்ளவர்களே என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்: நானே தேவன் வேறொருவரும் இல்லை. முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று என்னைக் கொண்டே ஆணை யிட்டிருக்கிறேன். இந்த நீதியான வார்த்தை என் வாயிலிருந்து புறப் பட்டது. இது மாறுவதில்லை என்கிறார். கர்த்தரிடத்தில் மாத்திரம் நீதியும் வல்லமை யுமுண்டென்று அவனவன் சொல்லி அவரிடத்தில் வந்து சேருவான். அவருக்கு விரோதமாய் எரிச்சல் கொண்டிருக்கிற யாவரும் வெட்கப்படுவார்கள். இஸ்ரவேலின் சந்ததியாராகிய யாவரும் கர்த்த ருக்குள் நீதிமான்களாக்கப் பட்டு மேன்மை பாராட்டுவார்கள்." (ஏசா. 45 : 22-25).

இந்த பூமியில் மேசியாவின் ஆட்சியின் போது நியாயத்தீர்ப்புகள் (உண்மையான போதனை) அளிக்கப் படும். "அவர் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பார். பொய் என்னும் அடைக்கலத்தைக் கல் மழை அழித்து விடும். (ஏசா. 28 : 17). தேவன் வாக்கு கொடுக்கிறார். (ஏசா. 65 : 16-20). பூமியிலே தன்னை ஆசீர்வதிக்கிறவன் சத்திய தேவனுக்குள் ஆசீர்வதிப்பான் ...... முந்தின இடுக்கண்கள் மறக்கப்பட்டு அவைகள் அவர் கண்களுக்கு மறைந்து போகும். (ஏன்னென்றால் இப்போது இருந்து வருகிற பாவமும் மரணமும் கொண்ட ஆட்சி இனி இராது). "இதோ நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன். முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை; மனதில் தோன்றுவதுமில்லை ......... இதோ எருசலேமைக் களிகூருதலாகவும் அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன் ........... அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை. அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும் தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள். நூறு வயது சென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான். நூறு வயதுள்ள வனாகிய பாவியோ சபிக்கப்படுவான். [தொடர்ந்து பாவியாகவே இருப்பானேயானால் அவர் சீர்திருத்த முடியாதவன் என்பது வெளியரங்கமாக்கப்பட்டு –

அழிக்கப்படுவான்). "என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை, கேடு உண்டாக்கு வதுமில்லை" என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா. 65 : 21-25; 11 : 1-10; தானி. 2 : 35, 44; 7 : 13, 14, 18, 27).

இந்த உலகின் ஆயிர வருட கால நியாயத்தீர்ப்பு நாளின் போது பரிசுத்த பெரும்பாதை திறந்துவிடப்படும். தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை. இழந்து போனதைத் திரும்பக்கொடுக்கும் செயல்முறையில் விசுவாசமுள்ளவர்கள் மாத்திரமே அதில் வருவார்கள். (ஏசா. 35 : 8-10). அவர்களுடைய நியாயத்தீர்ப்பு தக்க முறையில் மதிப்பீடு செய்யப்பட்டவையாகத் தான் இருக்கும். அவர்கள் போதிக்கப்படுவார்கள். (சங். 19 : 7-11; 25 : 8, 9; 72 : 1-4; 119 : 108; ஏசா. 56 : 1; 59 : 8-15). அவர்கள் சோதிக்கப்படுவார்கள். (சங். 26 : 1-3; எரே. 11 : 20; 20 : 12). சீர்திருந்தும்படிக்கு சிட்சிக்கப்படுவார்கள். (ஏசா. 26 : 9). தீர்ப்பளிக்கப்படுவார்கள். (உபா. 1 : 16; சங். 17 : 2; ஏசா. 11 : 4).

சத்தியத்திலும் நீதியிலும் சரியாக பயிற்சி செய்கிறவர்களும் சாந்த குணம் உள்ளவர்களும், போதிக்கப்படத்தக்கவர்களும், சாதுவானவர்களும் வெள் ளாடுகளைப் போல் அல்லாமல் செம்மறி ஆடுகளைப்போல குணாம்சத்தை விருத்தி செய்கிறவர்களும் பரிசுத்த பெரும்பாதையில் பூரண மனுஷீகத்தை அடைவார்கள். ஆயிர வருட யுகத்தின் முடிவில், சாத்தான் அவிழ்த்து விடப்படும் கொஞ்சக் காலத்தின் இறுதியான தங்களுடைய பரீட்சையில் உண்மையுள்ளவர்களுக்கு பூமியில் நித்திய ஜீவன் கொடுக்கப்படும். (சங். 107 : 39-42). இந்த பூமியானது ஏதேன் தோட்டத்தைப் போல மிகவும் அழகாக திரும்ப கொடுக்கப்பட்ட பரதீஸாக இருக்கும். (ஏசா. 51 : 3; 60 : 21; எசே. 36 : 35; எரே. 3 : 17). பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள். துன்மார்க்கனும் அவர்களுடன் சேர்த்து அழிக்கப்படுவார்கள். (சங். 37 : 9-11, 20, 22, 28, 29, 34, 38; 145 : 20; ஏசா. 1 : 28). "நான் படைக்கப் போகிற புதிய வானமும் புதிய பூமியும் அவருக்கு முன்பாக நிற்கும்" என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா. 66 : 22). தேவனுடைய தாசன் தான் கொள்ளையாடிய பொருளின் மூலம் பெற்ற வெற்றியை பலவான்களுடன் பங்குபோட்டுக் கொள்வார். கர்த்தருக்குள் பெலவான்களாய் இருக் கிறார்கள். தப்பறைகளுக்கும் பாவத்திற்கும் விலகி சத்தியத்திற்கும் நீதிக்கும் திரும்பி இருப்பார்கள்.

## தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கான உண்மையான அடிப்படைகள்

### TRUE BASIS FOR GOD'S BLESSINGS

தம்முடைய தாசனைப் பற்றிய சம்மதத்தையும் சாட்சியையும் முடிவிலே அறிவிக்கையில் தேவன் இது போன்ற எல்லா ஆசீர்வாதங்களையும் அடைவதற்கு உண்மையான ஆதாரங்கள் எவை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார். அவருடைய தாசனுக்கும் அவருடன் சேர்ந்தவருக்கும் இதனை அறிவிக்கிறார். யாருக்கு இதனை அறிவிக்கிறார் என்றால் அவரை தங்களின் மேசியாவாகவும் தங்களின் இரட்சகராகவும் இராஜாவாகவும் ஏற்றுக் கொண்டு, தங்களுடைய ஜீவியத்தை அர்ப்பணித்து பிரதிஷ்டை செய்து அவரை தங்கள் தலைவராக ஏற்று அவரின் கீழ் சத்தியத்திலும் நீதியிலும் தேவனுடன் ஐக்கிய உறவிற்குள் திரும்பவும் வந்து நித்திய ஜீவனின் ஆசீர்வாதங்களை அவரிடமிருந்து பெறுகிறவர்களுக்கும் இதனை அறிவிக்கிறார். உண்மை யும், ஒரே அடித்தளமுமாக இருப்பதை நாம் எக்காரணம் கொண்டும் நெகிழவிடக்கூடாது. அதனை மறந்து விடவும் கூடாது. அது பின் வருமாறு.

"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து அக்கிரமக்காருக்காக வேண்டிக் கொண்டார்." இங்கு எபிரேய வார்த்தைகள் tachath asher டாசாத் ஆஷேர் "ஏனென்றால்" என்கிற அர்த்தத்தைக் கொடுக்கும் விதமாக மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால் அது அதன் முழு அர்த்தத்தை கொடுப்பது கிடையாது. அதன் பொருள் ஓர் நஷ்ட ஈடாக கொடுக்கும் ஒரு வெகுமதியைக் குறிக்கும். Delutzsch டிலுட்ஸ்க் பின் வருமாறு மொழிப்பெயர்க்கிறார். அதற்குப்பதிலாக என்று "in return for that" மொழிப்பெயர்த்துள்ளார். அத்துடன் அதனை விமர்சிக்கிறார். "தம்முடைய சொந்த ஜீவனுக்குரிய இரத்தத்தை கொடுத்து மிகப் பெரியதோர் மீட்கும் பணியை அவர் ஆற்றி முடித்ததற்கு ஒரு மகத்தானதோர் பகுதி அல்லது அதற்கு என்று ஒதுக்கப்பட்டிருந்தவற்றை "அதற்கு ஈடாக" பரம பிதா அவருக்கு பங்கிட்டு கொடுத்தார். இங்கு he'erah ஹி இர்ரா. (அதாவது poured out ஊற்றினார்) என்பதின் பொருள் அத்தனையும் களைந்து விடுவது, வெளுமென விடுதல், காலி செய்வது அல்லது முற்றிலுமாக ஊற்றி விடுவது, அதன் கடைசியாக தேங்கி நிற்கும் எந்த ஒரு பகுதியையும் வைக்காமல் ஊற்றுவது" என்பதைக் குறிக்கிறது.

தேவனுடைய தாசன் தமது மானிட சரீரத்தை மாத்திரம் கொடாமல் மனப்பூர்வமாக (சங். 40 : 7, 8). அதுவும் முழுமையாக தம்முடைய ஆத்துமாவை ஊற்றினார். அதாவது தன்னுடைய மனுஷீகத்தை ஜீவியாயிருப்பதற்கு தேவையான யாவற்றையும் மரணத் திற்குக் கொடுத்தார். இங்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் எபிரேய வினைச் சொல் yaphgia யாப்கியா "வேண்டிக் கொண்டார்" என மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அது அபூரணமான முற்று பெறாத வரும் காலத்திற்குரியதைக் குறிக்கிறது. அது ஓர் வேலை ஆரம்பமாகியதை சுட்டிக் காட்டுகிறது. ஆனால் அது இன்னமும் முடிவுக்கு வரவில்லை. அவர் அக்கிரமக்காரர்களுக்காக வேண்டிக் கொள்வதற்காக என்றென்றும் ஜீவிக்கிறார். அவருடைய ஆசாரிய வேலை நமது நிமித்தம் முழுமையாக நிறைவேற்றி முடிக்கும் வரைக்கும் இந்த பணியினை செய்து கொண்டிருப்பார். இந்த உலகத்தின் நியாயத்தீர்ப்பு நாளின் முடிவு வரைக்கும் முழுமையாக இந்த வேலை நிறைவடையப் போவதில்லை. "ஏன்னென்றால் அவர் இந்த பூமியை நியாயம் தீர்க்க வருகிறார். அவர் நீதியாய் இந்த உலகை நியாயம் தீர்ப்பார். தம்முடைய சத்தியத்தைக் கொண்டு இந்த ஜனங்களை நியாயம் தீர்ப்பார்.

(சங். 96 : 10, 13; 38 : 9). ஆபிரகாமின் வித்தின் மூலம் இந்த பூமியின் வம்சங்கள் யாவும் ஆசீர்வதிக்கப்படும். இந்த பூமி முழுவதும் அதிலும் குறிப்பாக இஸ்ரவேலர் வந்துகொண்டிருக்கும் ஆசீர்வாதங்களில் மகிழ்ச்சி யடைவார்களாக. இது இப்பொழுது மிகவும் சமீபமாக இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தம் நிச்சயமானது. தேவன் தாமே இந்த வாக்குத்தத்தத்தை செய்திருக்கிறார். இது குறித்த உத்திரவாதத்தையும் கொடுத்திருக்கிறார். (ஏசா. 62 : 1, 2). "சீயோன் நிமித்தமும் [ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தின் காரணமாக - "வானத்து நட்சத்திரங்கள் காரணமாக - ராஜ்யத்தின் காணக்கூடாத பகுதி - விசேஷமாக மேசியாவும், அவரது மணவாட்டியும், ஆட்டுக்குட்டியானவரின் மனைவி நிமித்தமும்] எருசலேமிநிமித்தமும் [ராஜ்யத்தின் காணக் கூடிய பகுதியில் இருக்கும் மூப்பர் மற்றும் வாலிபரான பாத்திரவான்களின் நிமித்தமும்] நான் மவுனமாயிராமலும் அதின் நீதி பிரகாசத்தைப் போலவும், [அவரின் நீதி மனுக்குலத்தின் மத்தியில் கிரியைச் செய்யும். அது அதிக பிரகாசமாகவும் தெளிவாகவும் இருக்கும். அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசை கெட்டுப் போவதில்லை - அது மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ளப் படும்.] அதின் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப் போலவும் (சங். 119 : 105) வெளிப்படும் மட்டும் அமராமலும் இருப்பேன். (ஏசா. 35 : 8).

ஜாதிகள் (இதில் இதர தேசத்தவர்கள், மோசே யையும் தீர்க்கதரிசிகளையும் ஏற்க மறுத்தவர்களும் மேசியாவையும் அவரது உண்மையுள்ள சீஷர்கள் களையும் தள்ளியவர்களுமாகிய மறுதலித்த யூதர்களும் இதில் அடங்குவார்கள்.) உன் நீதியையும் சகல ராஜாக்களும் [மனுக்குலமனைத்தும் நித்திய ஜீவனை இந்த உலகில் பெறுவதற்குரிய தகுதியுடைய யாவருக்கும் தங்களின் ஆதிப் பிதாவாகிய ஆதாம் ஆதியில் இழந்த இராஜ்ய பார அந்தஸ்தை திரும்பிக் கொடுப்பார். (ஆதி. 1 : 26, 28; சங். 8 : 4-9]. உன் மகிமையையும் காண்பார்கள். கர்த்தருடைய வாய் [பரிசுத்த வேதாகமம் என்னும் அவருடைய வாய் மூலம் நம்மிடம் பேசுகிறார்] சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்.

தேவனுடைய தாசனாகிய மேசியாவைக் குறித்து, ஏசா. 52 : 13 முதல் 53 : 12 வரை உள்ள வசனங்களில் எப்பேற்பட்ட வியக்கத்தகுந்த தீர்க்கதரிசனம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் அவருடைய ஞானம், விவேகம், மனுஷனாகிய விதம், தாழ்மை, அவர் புறக்கணிக்கப்பட்டது, அவருடைய பாடுகள், துயரங்கள், மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தது பாவமற்ற தன்மை, மரணம், பாவநிவாரணம், உயிர்த்தெழுதல், மேன்மைப் படுத்தப்பட்ட விதம், அவர் சுதந்தரித்துக் கொண்டது, அவர் பாவிகளுக்காக பரிந்து பேசுவது, இத்துடன் அவர் அநேகருக்கு தம்முடைய இரட்சிப்பை வழங்குவது, சுவிசேஷ செய்தியை பரப்புவது (அவரைப் பற்றிய அறிவை) மற்றும் விரிவடையும் அவருடைய நித்திய ராஜ்யம் ஆகியவை அவ்வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலர்களைப் பொருத்த மட்டில், இவர்களை தேவன் பல தேசத்தவர்கள் மத்தியில் சிதறடித்தாலும் அவர் அவர்களை கைவிட்டதும் இல்லை அவர்களை அழித்துப் போடவும் இல்லை. (உபா. 4 : 27-31). அவர்கள் தங்கள் சொந்த தேசத்தில் ஓர் ஜாதியாக கூட்டிச் சேர்க்கப் படுகிறார்கள். அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை மிகுதியாக செயல்படுத்தி வருகிறார். ஆகையால் அவர்கள் நன்கு களிகூரலாம். (எரே. 16 : 14-16). அவர்கள் இப்போது ஒரு புதிய யுகத்திற்குள் பிரவேசிப்பதற்கு அதன் வாசலில் நிற்கிறார்கள். அவர்கள் இதுவரை அறிந்திராத கனவிலும் கூட அறிந்திராத மாபெரும் செழிப்பும் ஆசீர்வாதமும் காத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் மனந்திரும்பி மேசியாவை ஏற்றுக் கொள்ளும் போது ஆபிரகாமின் சந்ததியாக பூமியின் சகல வம்சத்தையும் ஆசீர்வதிப்பதற்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை கொண்டு வருவதற்கு தேவனால் உபயோகப்படுத்தப்படுவார்கள். (ஆதி. 12 : 3; 22 : 16-18). (E. Vol 15 பார்க்க) ......

* * *








# வானவில் வாக்குறுதி THE RAINBOW PLEDGE

நோவாவும் அவன் குடும்பத்தாரும் பேழையை விட்டு வெளியே வந்தபோது அவர்கள் தாங்கள் செலுத்திய பலியினால் தேவனுடைய அங்கீகரிப்பை பெற்றார்கள். இனி ஒருபோதும் ஜலப்பிரளயத்தினால் மனிதனை அழிப்பதில்லை என்னும் வாக்குறுதியை தேவன் அளித்து அடையாளமாக வானவில்லை வைத்தார். வானவில்லானது அதற்கு முன்பு ஒருபோதும் காணப்பட்டது இல்லை. இதற்கு வேதாகமம் கூறும் காரணம், என்னவென்றால், மழையானது அதற்கு முன்பு பெய்யவில்லை என்பதே. (ஆதி. 2 : 5). மேலும், சூரிய

ஒளியானது நேரடியாக பூமியில் வீசினது இல்லை. மாறாக, தண்ணீர் வளையங்கள் வழியாக ஊடுருவி பூமியை வந்தடைந்தன.



தண்ணீர் வளையங்கள் விழுந்ததின் விளைவாக பூமியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மழை, பெருவெள்ளம், வறட்சி, இடியுடன் கூடிய புயல், சூறாவெளி, அதிகமான வெப்பம் மற்றும் குளிர் இவையாவும் இதனால் ஏற்பட்ட விளைவே தண்ணீர் வளையங்களின் கீழே இவைகள் ஏற்பட சாத்தியங்கள் இல்லை. நோவாவின் மது மயக்கமும் இதனோடு இணைந்த ஒன்று தான். ஜலப்பிரளயத்திற்கு முன்பு திராட்சை ரசம் மதுவாக மாறியது இல்லை. சூரிய ஒளியினால் மதுவாக மாறியது. நோவாவும் இதன் விளைவை அதற்கு முன்பு உணர்ந்தது இல்லை.

சமுத்திர நீரோட்டம் மாற்றமடையச் செய்வதற்கு முன்னதாகவே தண்ணீர் வளையங்கள் விழுந்ததின் விளைவாக துருவ பகுதிகளில் மிகுந்த குளிரும், வெப்ப மண்டல பகுதிகளில் மிகுந்த வெப்பமும் ஏற்பட்டது.

இந்த மாற்றம் நிச்சயமாக சடுதியில் நிகழ்ந்த ஒன்றாகத் தான் இருக்க வேண்டும். இதற்கு ஆதரவான அத்தாட் சிகள் நம்மிடம் உண்டு. வடக்கு சைபீரியாவில் ஒரு கருப்பு மான் பனியில் மூழ்கிய வண்ணம் கண்டு பிடிக்கப்பட்டது. அது உணவு உட்கொண்டிருந்த நேரத்தில் அதன் மரணம் நிகழ்ந்தது என்பதற்கு அதன் வயிற்று பகுதியில் இருந்த புல் சாட்சியாகும். இதைப்போலவே, பழங்கால யானை ஒன்றும் தன் வாயில் புல்லுடன் பனியில் மூழ்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டது. இவ்வண்ணம், துருவ பகுதிகள் ஒரு காலத்தில் மிதமான வெப்ப நிலையில் இருந்தது எனவும், தண்ணீர் வளையங்கள் விழுந்ததினிமித்தம் இந்த சடுதியான மாற்றம் நிகழ்ந்தது என்பதும் தெளிவாகிறது. இவ்வாறாகவே மாபெரும் பனி மலைகளும் உறைந்த பனிக் கட்டிகளும் திடீரென உருவாகி பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து இருந்து வருகின்றன. விஞ்ஞானிகள் ஏற்கனவே கண்டுபிடித்தபடி, வட அமெரிக்க கண்டம் மற்றும் வட மேற்கு ஐரோப்பா பிரதேசத்தின் பனி பாறைகள் பேரலைகளின் மூலம் கொண்டுவரப்பட்டன. அவைகள் மாபெரும் வேகத்தில் மலைகளைப் பிளந்து எக்காலத்திற்குமுரிய அவைகளின் அடையாளங்களை விட்டுச் சென்றுள்ளன. அவர்கள் பனி பாறைகளை வெட்டி பார்த்தபோது இதை கண்டுபிடித்தார்கள். துருவ பிரதேசத்தின் பெருவாரியான பனிப்பாறைகள் பூமத்திய நீரோட்டம், வளைகுடா நீரோட்டம் மற்றும் ஜப்பான் நீரோட்டங்களின் மூலம் ஏற்பட்டது ஆகும்.

## 19-ம் பாடத்துக்கான கேள்விகள் :

1) தேவன் ஏன் வானவில்லை அனுப்பினார்?
2) உடன்படிக்கை என்றால் என்ன? அகராதியை பார்க்கவும்.
3) வேறு சில வாக்குத்தத்த உடன்படிக்கைகளின் பெயர்களை கூறுக? See Epiphany Studies. Vol. 15, pages 667-736.
4) ஜலப்பிரளயத்திற்கு முன்பு ஏன் வானவில் தோன்றவில்லை? Para. 1.
5) தண்ணீர் வளையங்கள் பூமியில் விழுந்த பின்பு பூமியில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன?
6) பூமியில் ஏற்பட்ட மாற்றங்களினிமித்தம் நோவாவுக்கு என்ன சம்பவித்தது? Para. 2.
7) துருவ மற்றும் வெப்ப மண்டலத்தின் பருவ மாற்றங்களுக்கான காரணங்கள் யாவை? Para.3
8) மாற்றங்கள் சடுதியில் நிகழ்ந்த ஒன்றா? அல்லது மெதுவாக நிகழ்ந்ததா? ஆதாரம் கொடுக்கவும். Para.4.
9) பனி பாறைகள் எவ்வாறு உருவாயின?
10) புவியியல் அடிப்படையில் அவை என்னென்ன மாற்றங்களை நிகழ்த்தின?
11) பனிப்பாறைகள் உருக என்ன காரணம்?
12) வெப்ப மண்டல பகுதிகளின் வெப்பம் கடைசியாக அதிகமாகும் என வேதாகமம் கூறுவதாக தெரிகிறது, என்ன காரணத்தினால்?

* * *

***For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :***

**Laymen's Home Missionary Movement**

32 D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**